# வலம்புரி

The Valampuri

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | ஆனி 27 | வெள்ளிக்கிழமை (11.07.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 204



ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT


# இடைக்கால சபை திட்ட வரைபு தயார்



## விரைவில் புலிகளிடம் சமர்ப்பிப்பு

## அமைச்சர் பீரிஸ் அறிவிப்பு

(நமது நிருபர்)

**தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கான இடைக்கால நிர்வாக சபை தொடர்பான திட்டவரைபு தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் அவ்வரைபு இன்னும் சில தினங்களில் நோர்வே அரசின் மூலம் விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சரவைப் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு அறிவித்துள்ளர்.

அச் செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் பீரிஸ் மேலும் தெரிவித்திருப்பதாவது;

இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தொடர்பாக அரசாங்கம் தயாரித்துள்ள திட்ட வரைபு யோசனைகள் இறுதி வடிவம் அல்ல.அரசின் இந்த யோசனைகள் தொடர்பாக விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிந்த பின் இடைக்கால நிர்வாக சபை தொடர்பான இறுதி வரைபு தயாரிக்கப்படும்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் நடத்திய ஆறு சுற்று சமாதானப் பேச்சுவார்த்தைகளை

(10ம் பக்கம் பார்க்க)

## தொண்டர் ஆசிரியர் நியமனம்

## பதவி ஏற்காதவர்களின்இடத்திற்கு புதியவர்கள் நியமனம் பெறுவர்

(திருகோணமலை)

வடக்குக கிழக்கு மாகாணத்தில் அண்மையில் நியமனம் வழங்கப்பட்ட தொண்டர் ஆசிரியர்களில் இதுவரை தமது கடமையைப் பொறுப்பேற்காதவர்களின் வெற்றிடங்களுக்கு புதிய வர்கள் நியமனம் செய்யப்படுவார்கள் என வட-கிழக்கு மாகாண கல்வி விளையாட்டுத் துறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தொண்டர் ஆசிரியர்களை எந்த விதமான அரசியல் தலையீடும் இன்றி நியமனம் செய்வதற்காக 1150 பேர்களைக் கொண்ட பட்டியல் ஒன்றினை தயாரித்ததாகவும் அதில் 909 பேருக்கு நியமனம் வழங்கியதாகவும் மிகுதியாகவுள்ள 241 பேர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு வெற்றிடம் நிரப்பப்படும் என்றும் அவ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (வ)

## தமிழ் மாணவர்களின் கல்வி விருத்திக்கு

## நோர்வே நாட்டு மாணவர்கள் 40 லட்சம் டொலரை வழங்குவர்

(ஒஸ்லோ)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் யுத்தத்தினால் பாதிப்புக்குள்ளான தமிழ் மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு நோர்வே நாட்டு மாணவர்கள் 40 லட்சம் அமெரிக்க டொலர்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

நோர்வே நாட்டில் வருடாந்தம் ஒக்டோபர் மாதம் நடைபெறும் வர்த்தக நிகழ்வின் மூலம் திரட்டப்படும் இந்நிதியை இலங்கையின் சமாதான முயற்சிக்கு உதவும் வகையில் வடக்கு கிழக்கு மாகாண மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு வழங்கவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்நாட்டுப் பாடசாலைகளில் கல்விகற்கும் 13ற்கும் 19ற்கும் இடைப்பட்ட வயதுடைய மாணவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு நிதி சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுவர். (த)

## லொறிச் சில்லில் அகப்பட்டு இளைஞன் நசியுண்டு மரணம்

(யாழ்ப்பாணம்)

லொறிச் சில்லில் அகப்பட்ட இளைஞன், அதனுள் நசியுண்டு அவ்விடத்திலேயே மிகவும் பரிதாபகரமாக மர்ணமானார்.

இச்சோகச் சம்பவம் நேற்று புன்னாலைக்கட்டுவனில் இடம் பெற்றது.சம்பவத்தில் உரும்பிராயைச் சேர்ந்த ந.துசிகாந்தன் (வயது-20) என்ற இளைஞனே லொறிச் சில்லில் நசியுண்டு மிகவும் பரிதாபகரமாக மரணமானவர். சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது;

பிரஸ்தாப இளைஞன் பஸ்ஸுக்காகக் காத்துக் கொண்டு நின்றார். பஸ் உரிய நேரத்துக்கு வருகை தராததால் வீதியில் வந்த லொறியில் ஏறிப் பயணத்தை தொடர்ந்த அவர் அதிலிருந்து இறங்குகின்ற போது, தவறி லொறிச் சில்லுக்குள் வீழ்ந்ததால் நசியுண்டு மரணமானார். (இ-4)

## இடைக்கால சபை குறித்து எதிர்க் கட்சிகளுக்கு விளக்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளிடம் கையளிக்கப்படவுள்ள இடைக் கால நிர்வாக சபை தொடர்பான விடயங்களை எதிர்க் கட்சியினருக்கு அரச தரப்புக்குழு எடுத்து விளக்கிக் கூறியுள்ளது.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று பிற்பகல் இடம் பெற்ற இவ் விளக்கக் கூட்டத்தில் அமைச்சர்கள் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோர் கலந்து கொண்டு விளக்கமளித்தனர்.

இவ விளக்கக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பொ.ஐ.மு-ஜே.வி.பி உட்பட மற்றும் அனைத்துக் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்ட போதும் பொ.ஐ.முவும்,ஜே.வி.பியும் இதில் கலந்து கொள்ளாமல் கூட்டத்தைப் பகிஷ்கரித்துள்ளன.

இக் கூட்டத்தில் இரா.சம்பந்தன், அ.விநாயகமூர்த்தி, செல்வம் அடைக்கலநாதன், என்.யோகராஜன், டக்ளஸ் தேவானந்தா, சித்தார்த்தன் ஆகிய எம்.பிகள் கலந்து கொண்டனர். (வ)

## இந்து கலாசார அமைச்சிடம் சீ-நோர் நிறுவனம் கையளிப்பு

## பிரதமர் ரணில் அறிவிப்பு

(கொழும்பு)

சீ-நோர் நிறுவனத்தை இந்து கலாசார அமைச்சின் கீழ் கொண்டு வந்துள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா நேற்று நடைபெற்ற பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் அறிவித்துள்ளார்.

சீ-நோர் நிறுவனம் இந்து கலாசார அமைச்சிடம் கையளிக்கப்பட்டமையயடுத்து அதன் தலைவராக இந்து கலாசார அமைச்சின் செயலாளர் ஒருவரை நியமனம் செய்துள்ளதாகவும் பிரதமர் அறிவித்துள்ளார்.

சீநோர் நிறுவனத்தை இந்து கலாசார அமைச்சின் கீழ் கொண்டு வருவது தொடர்பாக நடவடிக்கை எடுத்த போதும் பல்வேறு மட்டத்திலும் எதிர்ப்புக் கிளம்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

## ரெலவ்ஸன் -தமிழ்ச்செல்வன் இன்று சந்திப்பு

(கிளிநொச்சி)

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ட்ரிக்வே ரெலவ்ஸன் விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை இன்று சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இச் சந்திப்பின் போது கடல் போக்குவரத்துத் தொடர்பாக அரசிறகும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே புதிய உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-5)

# அமைச்சர் திஸநாயக்கா இராஜினாமாச் செய்தார்

## கடிதத்தை ஏற்க பிரதமர் மறுப்பு

(கொழும்பு)

சிங்கப்பூரில் இருந்து ஒரு தொகுதிப் பொருட்களை கொள்வனவு செய்தமை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையை அடுத்து விவசாய சமுர்த்தி விவகார அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்வதாக நேற்றுப் பிற்பகல் திடீரென அறிவித்துள்ளார்.

அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தனது இராஜினாமா தொடர்பாகத் திடீரென அறிவித்த கையோடு இராஜினாமா தொடர்பான கடிதத்தையும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அமைச்சரின் பணிப்பின் பேரில் சிங்கப்பூரில் இருந்து ஒரு தொகுதி பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டது.அப்பொருட்களுக்குரிய பணத்தை திறைசேரி வழங்கச் சம்மதிக்காத காரணத்தினால் அது தொடர்பாகக் கடந்த ஒரு மாத காலமாக இழுபறி நிலை ஏற்பட்டதை அடுத்தே அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்கா தனது பதவியை இராஜினாமா செய்வதாகத் தெரியவந்துள்ளது.

இவ் இராஜினாமாக் கடித்தை பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவிடம் நேற்று சமர்ப்பித்திருந்த போதும் அதனை பிரதமர் ஏற்கவில்லை என்றும் அமைச்சரவை வட்டாரங்கள் தெரிவித்தன. (ம)

## முட்கம்பி வேலியில் மின்சாரம்

# வேலணைச் சம்பவம் பற்றிப் பிரதமருக்கு சர்வதேச மாணவர் பேரவை கடிதம்

(யாழ்ப்பாணம்)

ஒரு பாடசாலையின் அருகில் முட்கம்பி வேலியினூடாக மின்சாரத்தைப் பாய்ச்சி வைத்திருந்த கடற்படையினரின் செயலானது அவர்களின் பொறுப்பற்ற போக்கினை எடுத்துக காட்டுவதாய் இருக்கின்றது என்று சர்வதேச மாணவர் பேரவை பிரதமமந்திரி ரணில் விக்கிரமசிங்கவிற்கு எழுதியுள்ள கடிதமொன்றில் சுட்டிக்காட்டியுள்ளது.

வேலணை தெற்கு ஐயனார் வித்தியாலய மாணவன் ஏ.அஜந்தன் முட்கம்பி வேலியில் மின்சாரம் பாய்ச்சப்பட்டிருப்பதை அறியாது அதில் கையை வைத்ததனால் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளார் என்பதை சுட்டிக்காட்டி பிரதம மந்திரிக்கு அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், ஒரு பாடசாலையின் முட்கம்பி வேலியில் மின்சாரத்தைப் பாய்ச்சி வைப்பதானது கடற்படையினரின் பொறுப்பற்ற தன்மையினை தெளிவாக எடுததுக் காட்டியுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

மனிதத் தன்மையற்ற இந்தச் செயற்பாட்டின் மூலம் யாழ்ப்பாணத்தில் இயல்புநிலை எந்த அளவிற்கு நிலைபெற்றுள்ளது என்பதைப் புரிந்து கொள்ளலாம். இதேவிதமாக முட்கம்பி வேலிகளில் மின்சாரத்தைப் பாய்ச்சிவிடும் நடைமுறை ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்களில் இருந்து வருகின்றது.

இனிமேல் அமைக்கப்படவிருக்கும் முகாம்களிலும் இந்த நடைமுறை இருக்கவே செய்யும் மக்கள் விருப்பத்துக்கு மாறாக அவர்களின் தாயகப் பகுதிகளில் படையினர் நிலைகொண்டிருப்பதனால்தான் இந்த நிலைமை ஏற்படுகின்றது. எனவே, இம்மாதிரிச் சம்பவங்கள் நிகழாதிருக்க ஆவண செய்யும்படியும், இவ்வாறு பொறுப்பற்ற முறையில் நடந்து கொள்ளும் இராணுவத்தினரைச் சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டிக்கும் படியும் பேரவையினர் பிரதம மந்திரியைக் கேட்டுள்ளனர். (பி)

## ஊவா மாகாண சபை உறுப்பினர்

# ரி.வி.சென்னனுக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

ஊவா மாகாண சபை உறுப்பினர் ரி.வி.சென்னனின் பதவியை ரத்துச்செய்யுமாறு கோரி மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1999ஆம் ஆண்டு நடந்த மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வியடைந்த எம்.உக்குபண்டாவே இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

இம்மனுவில் தேர்தல் ஆணையாளர் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், ரி.வி.சென்னன் ஆகியோர் பிரதி வாதிகளாகக் குறிப்பிடப்படடுள்ளதுடன், மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடாத ரி.வி.சென்னனை ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரின் வேண்டுகோளுககு இணங்க மாகாணசபை உறுப்பினராக நியமிக்கப்பட்டது சட்டத்துக்கு முரணானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவரது பதவியை செல்லுபடியற்றதாகச் செய்யுமாறும் அம்மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (தி)

## குருநகர்ப் பகுதிக்கு

# மீளக்குடியமரவென வந்த 279 குடும்பங்கள் ஏமாற்றம்

(யாழ்ப்பாணம்)

குருநகர்ப் பகுதியில் கஸ்ரம்ஸ் வீதி தொடக்கம் தொடர்மாடிக் கட்டடம் வரையான உயர் பாதுகாப்பு வலயப பகுதியில் உள்ள வீடுகளில் மீளக்குடியேறமுடியாது 279 குடும்பங்கள தொடர்ந்தும் அல்லலுறுகின்றன.

கடந்தகால யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்து வன்னியில் வாழ்ந்த மக்கள் தற்போதைய சமாதானச் சூழ்நிலையில் மீளக்குடியமர வந்துள்ளனர்.

ஆனால், இவர்களது வீடுகளை ஆக்கிரமித்துள்ள படையினரோ மீளக்குடியமர அனுமதிக்காத நிலையில் அவர்கள் அகதி முகாம்களிலும், உறவினர் வீடுகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இதேவேளை, இப்பாதுகாப்பு வலயததை அகற்றுமாறு பிரதமர், ஜனாதிபதி, பாதுகாப்பு அமைச்சு ஆகியோருக்கு மகஜர் அனுப்பப்பட்டும் இன்றுவரை எந்தப் பதிலும் கிடைக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (உ-4)

# மீனவர்களின் பிரச்சினைகள் குறித்த விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன

யாழ். குடாநாட்டு மீனவர்கள் எதிர்நோக்கும் தொழில் ரீதியான பிரச்சினைகள் குறித்த விபரங்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சேகரிதது வருகின்றது. படைத்தரப்பினால் மீனவர்கள் எதிர்நோக்கிவரும் பிரச்சினைகள் மற்றும் முட்டுக் கட்டைகளைத் தொடர்ந்தே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இப் பணியில் ஈடுபட்டுள்ளது.

இந்த வகையில் ஒவ்வொரு கடற்றொழிலாளர் சங்கத்திற்கும் நேரடியாகச் சென்று விபரங்களைச் சேகரித்து வருகின்றன.

இவ்வாறு பெறப்படும் தரவுகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட படை உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி இப்பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணும் முயற்சி இடம்பெறவுள்ளது. (உ-4)

### கூட்டம்

(தென்மராட்சி)

அறவழிப் போராட்டக் குழுவின் இயக்குநர் சபைக் கூட்டமும், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சந்திப்பும் நாளை சனிக்கிழமை கைதடி நுணாவிலில் உள்ள அறவொளி செயலகத்தில் நடைபெறவுள்ளது.(உ-77)

# உத்தியோகத்தர் பற்றாக்குறை 16 ஆயிரம் வழக்குகள் தேக்கம்

(கொழும்பு)

அரசாங்கப் பகுப்பாய்வுத் திணைக்களத்தில் நிலவும் உத்தியோகத்தர் பற்றாக்குறை காரணமாக 16 ஆயிரத்துக்கும் அதிகமான வழக்குகள் தேங்கியுள்ளன என பிரதி இரசாயன பரீட்சகர் வி.ஜே.சோமபால தெரிவித்துள்ளார்.

பகுப்பாய்வுத் திணைக்களத்தில் நிலவும் 17 வெற்றிடங்களை நிரப்பும் பொருட்டு பரீட்சைத் திணைக்களத்தினால் பரீட்சை நடாத்தப்பட்டு பெறுபேறுகள் பொது நிர்வாக அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

எனினும், அரசதுறைகளுக்கான ஆடசேர்ப்பு நடவடிக்கையினை இடைநிறுத்துமாறு பொது நிர்வாக அமைச்சு வெளியிட்ட சுற்றறிக்கையினைத் தொடர்ந்து இவ் வெற்றிடங்களை நிரப்புவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (தி)

# பலியானவரின் மார்பில் 900 மி.லீ. இரத்தம் உறைந்திருந்தது

## சட்ட வைத்திய அதிகாரி சாட்சியம்

(கொழும்பு)

ஹனிபா முகமட் ரிஸ்வானின் காயங்கள் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்டவை 900 மில்லிலீற்றர் இரத்தம் அவரது மார்பில் உறைந்திருந்தது என்று உடத்தலவின்ன படுகொலைகள் விசாரணையின் போது நேற்று முன்தினம் சாட்சியமளித்த சட்டவைத்திய அதிகாரி அசோக பண்டார செனவிரட்ண தெரிவித்துள்ளார். உடத்தலவின்னவின் 2001ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி இடம்பெற்ற 10 முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைகள் சம்பந்தமான வழக்கு விசாரணை தொடர்ந்தும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இடம்பெற்று வருகின்றது.

நேற்று முன்தினம் சாட்சியமளித்த சட்ட வைத்திய அதிகாரி மேலும் தெரிவித்ததாவது,

கண்டிப் பொலிஸ் பிரேத அறையில் பிரேத பரிசோதனை செய்த பின் கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் பரிசோதனை செய்தேன்.

ஹனீபா முகமட் ரிஸ்வான் சடலத்தை அவரது தந்தை அடையாளம் காட்டினார். இவரது சடலத்தில் மூன்று காயங்கள் காணப்பட்டன. தலைககுப் பின்புறம் ஒன்றும், முகம், வலதுதாடை ஆகியவற்றில் மற்றைய காயங்களும் இருந்தன. இடது தோளின் பின்புறத்தில் துப்பாக்கி ரவை துளைத்துச் சென்ற காயம் ஒன்று காணப்பட்டது. 1ஆம் இலக்கக் காயத்தில் தலைக்குப் பின்புறத்தில் துப்பாக்கி ரவையுடன் துண்டொன்று இருந்தது.

இந்த ரவை வேறு ஏதேனும் பொருளில்பட்டு இவர்மீது பட்டிருக்கக் கூடும். இலக்கம் 2இல் உள்ள காயம் துப்பாக்கி ரவையால் ஏற்பட்ட காயம் அல்ல. 3ஆம் காயம் மார்பில் உட்புகுந்த ரவை விலா எலுப்பில் பட்டு நுரையீரலைத் தாக்கியிருந்தது. விலா எலும்பு முறிந்திருந்தது. இவ்வாறு அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார். (உ)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

## இன்று பதின்மூன்றாம் திருவிழா



# நயினை நாகபூசணி அம்மன் பாமாலை

### அருள்வாய் மாயவன் சோதரியே

அம்மா! நயினை நாக பூசணியே
அடியோம் எங்களின் கண்ணீர் துடைப்பாய்!
பைம்பொழில் வாழ்க்கை பாரில் அளிப்பாய்-
பைங்கிளியே பாவலர் பாடும் தாயே
செம்மொழி எம்மொழி தாய்மொழி தரணியில்
சீராய்ச் செழித்திட அருள்வாய் அம்மா!
அம்பலவன் பாகம் அமர்ந்த அன்னையே!
ஆனந்த ரூபினியே சரணம் சரணம்

நாகம் நறுமலர் கொண்டு பூசித்த
நயினை நாகபூசணித் தாயே!
வேகமாய் ஈழத் தமிழினம் அழிக்க
வந்த பகைவரை இணங்கச் செய்தெம்
பாகம் தந்தே ஒன்றே குலமாய்
ஒருவனே தேவனாய் நன்றா யிருக்கும்
யோகம் அருள்வாய் மாயவன் சோதரியே
ஆனந்த ரூபினியே சரணம் சரணம்

கடலலை சாமரை வீச உதய
சூரியன் பொற்கதிர் குவித்து வணங்க
அடியவர் கூட்டம் கடல்போல் பெருகி
அங்கரம் கூப்பி உன்னை வணங்கி
படிதனில் உருண்டு வலம்வர, நயினை
நாகபூசணி யம்மா! எம்மிடம்
கடிதன வந்த பகைதனை நீக்குவாய்
ஆனந்த ரூபினியே சரணம் சரணம்

மாதாஜி

### விண்ணவரும் மண்ணவரும் தொழநின்றாயே

எண்ணிய எண்ணங்கள் எளிதினில்
ஈடேற
பண்ணிய பாவங்கள் பதறிப்
பறந்தோட
விண்ணவரும் மானிடரும்
கரங்கூப்பி மலர்சொரிய
புண்ணியம் சேர் அன்னையவள்
உறைந்தருளும் தலமிதுவே.

வரதராஜன்

### சுதந்திரத்தைத் தந்தருள்வாய்

ஈழமணித் திருநாட்டின் யாழ் மேட்டில்
வளங்கொழிக்கும் நயினை நகர்ப்பதியில்
கடல் நடுவில் கோயில் கொண்ட
நயினை தேவி நாகேஸ்வரி - யே
என்நெஞ்சமெலாம் குளிரவைப்பாய்
அடியவர்க்கு எளியவள் நீயம்மா
அருள் மழையைப் பொழிந்திடம்மா!
சுகமளிக்கும் சுந்தரியே எங்களுக்கு
சுதந்திரத்தைத் தந்தருள்வாய்

அராலியூர் செ.சக்திதாசன்

### மோட்சம் பெற்றனர்

சின்னஞ் சிறுதீவில் – உனக்கோர்
திருவிழா நடக்கிறது
முன்னே ஓடிவந்து – பக்தர்
மோட்சம் பெற்றிடுவார்
அன்புப் படகிலே – உனையே
காண ஏறிடுவார்
மன்னும் புகழினையே – தாயே
மான்புடன் போற்றிடுவோம்.

பூ. நகுலன் தெல்லிப்பழை.

### 21பேர் பலி; 20ற்கும் மேற்பட்டோர் காயம்

# பேருந்து பள்ளத்தில் பாய்ந்து ஏற்பட்ட கோரவிபத்து

(கின்ஷாசா)

ஹொங்கொங்கில் பாடசாலை மாணவர்களையும் வேறு பயணிகளையும் ஏற்றிச் சென்ற இரட்டை அடுக்குப் பேருந்து விபத்துக்குள்ளானதில் 21 பேர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளதுடன் 20ற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

விபத்துக்குள்ளான பேருந்து மிக வேகமாகச் சென்றுகொண்டிருந்த சமயம் கட்டுப்பாட்டை இழந்து பாலம் ஒன்றின் தடைகளையும் தாண்டி 160 மீற்றர் ஆழமான பள்ளமொன்றில் வீழ்ந்ததனாலேயே இக்கோர விபத்து நேர்ந்துள்ளது.

இப்பேருந்து மிகவும் சகதி நிறைந்த பகுதியில் வீழ்ந்து, புதைந்ததனால் பேருந்தின் ஒரு பகுதி வெட்டப்பட்டே உயிரிழந்தவர்களையும் காயமடைந்தவர்களையும் மீட்கும் பணிகள் மேற்கொள்ளப்பட் டதாக மீட்புப் பணியில் ஈடுபட் டவர்கள் கூறினார்கள்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் எனவும் அம்மீட்புப் பணியாளர்கள் தெரிவிக்கின்றனர். (பி-2)



அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தில் டக்சன் கேட்டலினா மலைப் பகுதியில் அண்மையில் கடுமையான காட்டுத்தீ பரவியது. சுமார் 97 ஆயிரம் ஏக்கர் சுற்றளவில் ஏற்பட்ட இந்தத் தீயை கட்டுப்படுத்துவதற்கு தீயணைப்புப் படையினர் கடுமையாகப் போராடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

### சோனியா தலைமையில்

# இந்தியாவில் புதிய அரசியல் கூட்டமைப்பு உருவாகும் சூழ்நிலை

(புதுடில்லி)

இந்தியாவில் புதிய அரசியல் கூட்டமைப்பு ஒன்று உருவாகக் கூடிய சூழ்நிலைகள் உருவாகி வருவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சிம்லாவில் நடைபெற்ற காங்கிரஸ் கட்சியின் தேசிய உயர் குழுக் கூட்டத்தில் அக்கட்சியின் தலைவி திருமதி சோனியாகாந்தி மதசார்பற்ற கட்சிகளுடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைப்பதற்கு காங்கிரஸ் கட்சி கொள்கையளவில் இணங்கத் தயாராய் உள்ளது என அறிவித்துள்ளதைத் தொடர்ந்து மேற்படி கூட்டமைப்புப் பற்றிய கருத்து உருவாகியுள்ளது.

சோனியாகாந்தியின் மேற்படிக் கருத்து தொடர்பாக தமிழ்நாடு திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் திரு மு.கருணாநிதி நேற்று முன்தினம் சென்னையில் கருத்து வெளியிடுகையில் இந்தியாவில் திருமதி சோனியாகாந்தியின் தலைமையில் புதிய அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட வாய்ப்பிருப்பதாகக் கூறியுள்ளார்.

இந்தியாவின் ஆளும் அரசில் அங்கம் வகிக்கும் தமிழகக் கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகம், பாட்டாளி மக்கள் கட்சி என்பன தமது கூட்டணித் தலைமை மீது அதிருப்தி அடைந்துள்ளதாகக் கூறப்பட்டு வருகின்றது.

துணைப் பிரதமர் அத்வானி தமிழக முதல்வர் ஜெயலலிதாவுடன் கொண்டிருக்கும் நெருக்கமான அரசியல் உறவும், இந்த தமிழக எதிர்க்கட்சிகளுக்கு விசனத்தை ஏற்படுத்தியுள்ளன.

எதிர்வரும் பொதுத் தேர்தலிலும், மாநில தேர்தல்களிலும் காங்கிரஸ் கட்சியின் தலைமையில் மதசார்பற்ற கட்சிகள் கூட்டணி அமைத்துப் போட்டியிடும் வாய்ப்பும்



இருப்பதாகக் கருதப்படுகின்றது.

இந்தியாவில் ஆளும் பொறுப்புள்ள பாரதீய ஜனதாவுக்கு சிறுபான்மை மக்களதும் மதசார்பற்ற கட்சிகளினதும் எதிர்ப்பு வலுப் பெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (பி-9)

# ரஷ்ய உணவுவிடுதியில் குண்டுவெடிப்பில் காவலர் பலியானார்

(மொஸ்கோ)

ரஷ்யாவின் மொஸ்கோ நகரிலுள்ள உணவு விடுதியொன்றில் குண்டொன்று வெடித்ததில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் பலியாகியுள்ளார்.

விடுதியில் விஷமிகள் சிலரால் வைக்கப்பட்டிருந்த குண்டை செயலிழக்கச் செய்தவேளையிலேயே இப்பாதுகாவலர் உயிரிழந்துள்ளார்.

இக்குண்டை விடுதிக்குள் கொண்டுவர ஒரு பெண்ணே உதவி புரிந்ததாகவும், குறிப்பிட்ட அப் பெண்ணைப் பொலிஸார் கைது செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

# ஆபத்தான நிலையில் முரசொலிமாறன்

(புதுடில்லி)

அமெரிக்க மருத்துவமனையொன்றில் சிகிச்சை பெற்றுவரும் இந்திய மத்திய அமைச்சர் முரசொலிமாறனின் உடல்நிலை ஆபத்தான நிலையில் உள்ளதென்றும் ஆனால் மாற்றமின்றி நிலையாக இருக்கிறதென்றும் நியுயோர்க்கிலுள்ள இந்தியத் தூதரகம் கூறியுள்ளது. டெக்ஸாஸ் மாகாணம் ஹூஸ்டனில் உள்ள மெதடிஸ்ட் மருத்துவமனையில் கடந்த 7 மாதங்களாக சிகிச்சை பெற்றுவந்த முரசொலிமாறன். நினைவு திரும்பாமலே அமெரிக்க நேரப்படி நேற்றுமுன் தினம் காலை காலமானதாக செய்திகள் வந்தன.

அன்று மாலை 5 மணிக்குக் கிடைத்த இச்செய்தியை தி.மு.க. தலைமை மறுக்கவோ உறுதிப்படுத்தவோ இல்லை.



மாறனின் உடல்நிலை ஆபத்தான நிலையில்தான் உள்ளது என்றும் ஆனால் முன்னேற்றம் ஏதுமின்றி அதே நிலையில் தொடர்கிறது என்றும் நியுயோர்க்கிலுள்ள இந்தியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (பி)

# சார்க் மாநாட்டின் போது இந்தியாவுடன் பேச பாக்.தயார்

(இஸ்லாமபாத்)

சார்க் அமைப்பின் வெளிவிவகார அமைச்சுக்களின் உயர் மட்ட அதிகாரிகளுக்கான மாநாட்டின் போது இந்தியாவுடன் பேச்சுக்கள் நடத்த தாம் தயாராக இருப்பதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

நேபாளத்தில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டை இருதரப்பு உறவுகளையும் வலுப்படுத்த சிறந்த சந்தர்ப்பமாக மாற்றிக்கொள்ள முடியும் என்று பாகிஸ்தானிய வெளிவிவகார செயலர் றியாஸ்ஹோகா தெரிவித்துள்ளார்.

7 நாடுகளின் வெளிவிவகார அமைச்சகங்கள் கலந்துகொள்ளவிருக்கும் இந்த மாநாட்டில் இந்தியா பாகிஸ்தான் தரப்பிலிருந்து உயர்மட்ட அதிகாரிகள் கலந்து கொண்டாலும் இவர்களுக்கிடையே பாகிஸ்தான் வெளிவிவகார அமைச்சரின் அறிவிப்புக்கு இணங்க பேச்சுவார்த்தைகள் நடைபெறும் சாத்தியம் இல்லையென இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் செயலாளர் ஹன்வான்ஷிபால் தெரிவித்துள்ளார்.

**சார்க் தேவையில்லை**

இதனிடையே சார்க் அமைப்பு இனித் தேவைப்படமாட்டாது என்றும் அதற்குப் பதிலாக தெற்காசிய நாடுகள் அனைத்தையும் ஒன்றிணைத்துப் பலமானதொரு அமைப்பு உருவாக்கப்படுமென்று இந்தியா கூறியுள்ளது.

புதுடில்லியில் அண்மையில் தெற்காசிய வர்த்தகர்கள் மத்தியில் உரையாற்றும் போது இத்தகவலை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜஸ்வந் சின்கா கூறியிருந்தார்.

தெற்காசிய நாடுகள் தமது அரசியல், சமூக, பொருளாதார வேறுபாடுகளைக் களைந்து பலமான புதியதொரு அமைப்பை உருவாக்க வேண்டிய வரலாற்றுத் தேவை தற்போது ஏற்பட்டிருப்பதாகவும் முன்னர் அமைக்கப்பட்ட சார்க் அமைப்பு தற்போது பலமிழந்து செல்வதாகவும் அவர் அங்கு மேலும் கூறியுள்ளார். (பி-2)

**WORLD NEWS உலக தரிசனம்**

### வியாழனை விடப் பெரியகோள்

# பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு

### 15 லட்சம் ஆண்டுகளில் இக்கிரகத்தை அடையலாம்

(லண்டன்)

வியாழன் கிரகத்தை விட இரு மடங்கு பெரிய கிரகமொன்றை பிரிட்டிஷ் ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர்.


பிரிட்டிஷ் ஜோன்மூர் பல்கலைக் கழக ஆய்வாளர் ஜோன்ஸ் தலைமையிலான குழுவினர் அவுஸ்திரேலிய நியூசவுத்வேல்ஸ் பகுதியில் அமைக்கப்பட்டிருக்கும் புதிய சக்தி வாய்ந்த தொலைகாட்டியூடாகவே இக்கிரகத்தைக் கண்டுபிடித்துள்ளனர்.

பூமியில் இருந்து 90 ஒளி வருட தொலைவில் அமைந்திருக்கும் "சிளி 70645" என்ற நட்சத்திரத்தை இப்பிரம்மாண்டமான கிரகம் வட்டப் பாதையில் சுற்றிவருகிறது. ஒரு தடவை இந்நட்சத்திரத்தை சுற்றி வருவதற்கு 6 ஆண்டுகள் ஆகின்றன எனத் தெரிவிக்கும் இக்குழுவினர், இப்பெரிய கிரகத்தின் சக்தி மிக்க ஈர்ப்பு விசை காரணமக நட்சத்திரத்தில் தென்பட்ட தடுமாற்றத்தை வைத்தே இக்கிரகத்தைக் கண்டுபிடிக்க முடிந்ததாகத் தெரிவித்துள்ளனர்.

மேலும், பூமியைப் போன்ற திண்மமான மேற்பரப்பைக் கொண்ட வேறு கிரகங்கள் பூமியைப் போன்ற பொருத்தமான இடத்தில் இருந்தபடி இந்நட்சத்திரத்தைச் சுற்றிவரலாம். அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அங்கு உயிரினவாழ்க்கை சாத்தியப்படலாம் எனவும் தெரிவித்துள்ளனர்.

சூரிய மண்டலத்தை அளவுகோலாகக் கொண்டால் சூரியனில் இருந்து செவ்வாய்க்கும், வியாழனுக்கும் இடைப்பட்டதான தூரத்தில் இக்கிரகம் அந்த நட்சத்திரத்தை சுற்றிவருவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இன்று விண்வெளியில் மனிதன் பயணம் செய்யும் வேக அடிப்படையில் இக்கிரகத்தை நோக்கிப் பயணம் செய்தால் இக்கிரகத்தை அடைய 15 லட்சம் ஆண்டுகள் செல்லுமென கணிப்பிடப்பட்டுள்ளது. (க-15)



செவ்வாய்க் கிரகத்திற்கு இரண்டாவது கனரக செயற்கைக் கோள் புளோரிடாவின் கேப் கெனவரள் மையத்திலிருந்து அனுப்பப்பட்டது. வெற்றிகரமாக ஏவப்பட்ட ரோவர் -பி புகையைக் கக்கிக்கொண்டு வானை நோக்கி சீறிப்பாயும் காட்சி.

# நேபாள சிறுமிகள் நலமாக உள்ளனர்

(காட்மண்டு)

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் சிங்கப்பூரில் அறுவைச் சிகிச்சை மூலம் பிரித்தெடுக்கப்பட்ட நேபாளிய குழந்தைகள் இப்பொழுது சுகமாக இருந்து வருகின்றனர். தலை ஒட்டிப் பிறந்த இந்தக் குழந்தைகள் சிங்கப்பூரில் 2001ஆம் ஆண்டு அறுவைச் சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்டனர். இப்பொழுது 3 வயதாகும் இக்குழந்தைகள் நல்ல ஆரோக்கியத்துடன் இருந்த போதிலும் இன்னமும் அவர்களால் நடக்கமுடியாது என்று அவர்களின் குடும்ப உறுப்பினர்களும் ஒரு டாக்டரும் கூறினார்கள்.

ஆனால் கடந்த ஞாயிற்றுக் கிழமை அறுவைச் சிகிச்சைக்குட்படுத்தப்பட்ட தலை ஒட்டிப்பிறந்த ஈரானிய சகோதரிகள் அறுவைச் சிகிச்சை மேசையிலேயே மரணமானார்கள்.

நேபாளக் குழந்தைகள் கங்காவும் ஜமுனாவும் உடல் நிலையில் ஸ்திரமாக இருந்த போதிலும் ஒருவரின் வளர்ச்சி வேகமாகவும் மற்றவரின் வளர்ச்சி வேகம் குறைவாகவும் இருப்பதாகக் கூறப்படுகிறது. கங்காவால் உட்கார முடியாது. ஆனால் ஜமுனா உட்காருவார். நடக்கவியலாது.

இவர்களை மேலும் உயர் நிலை சிகிச்சைக்கு உட்படுத்துவதற்காக டாக்டர்களும் உறவினரும் மீண்டும் சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்லவிருக்கின்றனர். இவர்கள் மீது அறுவைச் சிகிச்சை நடத்திய சிங்கப்பூர் பொது மருத்துவமனை டாக்டர்கள் தமது சேவைகளை இலவசமாக வழங்கியிருந்தார்கள். ஏனைய செலவுகள் பொது நன்கொடைகள் மூலம் நிவர்த்தி செய்யப்பட்டன. (பி)

# இன்று ஒரு தகவல்

## காகம்

யாராவது திருப்பித் திருப்பிச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தால் ''ஏன் இப்படிக் காகம் மாதிரி கத்துகிறாய்?'' என்று சொல்வது உண்டு. அவ்வாறு சொல்பவரும் சத்தம் போட்டுத்தான் சொல்வார். இப்படி கத்துபவர்களுக்கெல்லாம் அறிவு இல்லையென்று சொல்ல முடியாது.

ஏனென்றால்,பறவை இனத்திலேயே அதிக அறிவு உள்ளது காகம் தான் என்று விலங்கியல் நிபுணர்கள் கூறுகின்றனர். அவர்கள் சொல்வதும் உண்மையாகத் தான் இருக்கும்.

ஏனெனில்,காகத்தைப் போய் ''காக்கா'' பிடிக்க வேண்டுமென்ற அவசியம் அவர்களுக்கில்லை. ஒருவர் நம்மைப் பார்த்து ''உங்களுக்கு அறிவு மிகுதி'' என்று கூறினால்,நாம் சந்தேகப்படலாம்.அதில் ஓர் நியாயம் உள்ளது. ஆனால் காகத்தின் விடயத்தில் சந்தேகப்பட வேண்டியதில்லை.

காகத்தின் இனத்தில் 32 வகை உள்ளதாம். உலகம் முழுவதிலும் காகம் பரவி வாழ்கின்றதாம்.முக்கியமாக அவற்றில் ஐந்து வகை இனங்களைப் பார்க்கலாம்.

அதில் இரு வகையை அண்டங்காகம் என்றும் மற்றைய மூன்று வகையை வெறுமனே காகம் என்றும் கூறுகின்றோம்.

எல்லாக் காகமும் கறுப்பு நிறம் தான். யாராவது வெள்ளைக் காகம் பறந்ததாகக் கூறினால்,அவர் கொக்குப் பறந்ததைப் பார்த்து விட்டுக் கூறுவதாக அர்த்தம்.

காகத்தின் நீளம் 16 அங்குலம் முதல் 20 அங்குலம் வரையும், அண்டங்காகத்தின் நீளம் 26 அங்குலம் வரையும் இருக்கும். சாதாரண காகங்கள் யாவும் மனிதர்கள் வாழும் பகுதிகளில் வசிக்கும். மரம்,பாறைப் பொந்து போன்றவற்றில் காகக்கூடுகளை பார்க்கலாம்.

காகத்திற்கு காலில் தான் பலம் அதிகம். எதை வேண்டுமானாலும் சாப்பிடும். வீட்டில் நாய்,கிளி,பூனை வளர்ப்பது போல் சிலர் காகத்தை வளர்ப்பதுமுண்டு.

அண்டங்காகம் அறிவு மிகுந்தது. கறுப்பாக பளபளப்புடன் இருக்கும்.சின்ன வார்த்தைகளைச் சொல்லிக் கொடுத்தால் கிளி போல திருப்பிச்சொல்லும்.உலகிற்கு முதலில் ''நோவாவின் படகில்'' இருந்து அனுப்பப்பட்ட பறவை இவ் அண்டங்காகம் என பைபிள் கூறுகின்றது.

அண்டங்காகம் காடு,மலைகளில் அதிகம் வாழும். தனது கூட்டை உயரமான பாறை உச்சி,மரங்களில் தான் அமைக்கும்.

ஒரு பெண்காகம் மூன்றிலிருந்து எட்டு வரை முட்டையிடும். இம்முட்டைகள் லேசான பச்சை நிறத்துடன், பொடி நிறப்புப்புள்ளிகளுடன் காணப்படும்.

நம்நாட்டு கவிஞர்கள் பெண்களின் கூந்தலுக்கு மேகத்தை ஒப்பிடுவர். ஆனால் மேல் நாட்டுக் கவிஞர்கள்,காகத்தின் நிறத்தையே ஒப்பிடுவர். அதிலும் அண்டங்காகத்தின் நிறத்தைத்தான் கூந்தலுக்கு ஒப் பிடுவர்.

காகத்தைப் பெண்களின் கூந்தலுக்கு ஒப்பிடுவது தான் பாதுகாப்பு. பெண்களோடு ஒப்பிட ஆரம்பித்தால் நிலைமை விபரீதமாகிவிடும்.

''நீ மயில் மாதிரி இருக்கின்றாய்'' என்றால் சந்தோசப் படுவார்கள்.

''நீ காகம் மாதிரி இருக்கின்றாய்'' என்றால் சண்டைக்கல்லவா வருவார்கள்?

சண்டை நடக்கும்போது இராணுவத் தளங்களில் இரவு நேரக்காவல் போடுவது போல ,''சில காகங்கள் இரவு நேரங்களில் காவலாளியாக வேலை செய்யும்'' ஏதாவது ஆபத்து வந்தால் கத்திச் சத்தம் போட்டு மற்றைய காகங்களையெழுப்பி விடும்.தாவரங்களை அழிக்கக்கூடிய பூச்சிகளை காகம் உண்பதனால் எமக்கு உதவியும் செய்கின்றது.

காகத்தைப்பற்றி இவ்வளவு கூறியாகிவிட்டது. சரி, காக்கா பிடிப்பது எப்படி?வேண்டாம்.தெரிந்த விஷயத்தைத் திருப்பித் திருப்பிக்கூறுவது நன்றாக இருக்காது.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலனாய்வுப் பிரிவினருக்குக் கூட இந்த நாட்டில் பாதுகாப்பு இல்லை

## மகிந்த ராஜபக்ஷ அங்கலாய்ப்பு

(கொழும்பு)

நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவோ தொடர்ந்து வரும் படுகொலைகளைக் கட்டுப்படுத்தவோ அரசு



எவவித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. இதனால் மக்கள் பெரும் அச்சத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய் அன்று நாட்டின் பாதுகாப்பிற்கு ஏற்பட்டுள்ள அச்சுறுத்தல் தொடர்பாக சபை ஒத்திவைப்பு பிரேரணையை சமர்ப்பித்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், புலனாய்வுப்பிரிவினருக்குக்கூட பாதுகாப்பு வழங்க முடியாத அரசாங்கம் எவ்வாறு நாட்டு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தப்போகின்றது?

விடுதலைப்புலிகளின் சட்ட விரோத செயற்பாடுகளைக் கண்காணிப்புக் குழுவினராலும் கட்டுப்படுத்த முடியாதது பெரும் துரதிர்ஷ்டமே.

மேலும்,கடந்த சில வாரங்களாக வடக்கிலும்,தெற்கிலும் பல கொலைகள் நடந்துள்ளன.

பாதாள உலகத்தினர் தெற்கில் கொலை,கொள்ளை,ஆட்கடத்தல் பாலியல் துஷ்பிரயோகங்கள் என்பவற்றில் ஈடுபடுகின்றனர்.

அதேபோல்,வடக்கு-கிழக்கில் பல அரசியல் கொலைகளும் ஆட்கடத்தல்களும் இடம்பெறுகின்றன.

புலனாய்வுப்பிரிவினருக்கு பாதுகாப்பை வழங்க அரசினால் இயலவில்லை.

பொலிஸ் நிலையத்தில் கூட கொலை நடக்கின்றது.

வடக்கு-கிழக்கில் கொலைக் கலாசாரத்தைக் கட்டுப்படுத்த கண்காணிப்புக்குழுவினராலும் இயலவில்லை.தாப்ருவின் கொலை சந்தேக நபர் மதனை விசாரிக்க இடையூறு ஏற்பட்டுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

இரண்டு கொலைக்கும்பலகளுக்கு மத்தியில் சாதாரண பொது மக்கள் அகப்பட்டுக்கொண்டு பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

தமது பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பொது மக்கள் நம்பினால்தான் நாட்டில் ஜன நாயகம் தழைக்கும் என்றார். (உ-8)

# மிதிவெடி அபாயத்தால் மின் விநியோகம் தாமதம்

(தென்மராட்சி)

தென்மராட்சி பிரதேசத்திற்கான மின் விநியோகப்பணிகள் ஆரம்பிக்கப்படாமைக்கு அரியாலை பிரதேசத்தின் வீதி ஓரங்களில் புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகள் அகற்றப்படாமையே காரணம் என இலங்கை மின்சார சபையின் பிரதிப்பொது முகாமையாளர் ஆர்.முத்து ரட்ணானந்தன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை,சாவகச்சேரியில் இருந்து கொடிகாமம் வரையிலான பகுதிக்கு மின்சாரம் வழங்குவதற்கான பூர்வாங்க வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள போதிலும்,அரியாலைப் பகுதியில் ஏ-9 பாதையில் காணப்படும் மிதிவெடிகள் அகற்றப்படாமையினால் இந்த நடவடிக்கையில் தொடர்ந்தும் தாமதம் ஏற்பட்டு வருகின்றதாகக் கூறப்பட்டுள்ளது.

மேலும்,குடாநாட்டிற்கான இரண்டாம கட்ட மின் விநியோகத்திட்டத்தின் கீழ்,தென்மராட்சிக்கும் அளவெட்டிக்கும் மின் விநியோகம் செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.இரண்டாம் கட்டப் பணிகள் பூர்த்தியாக்கப்பட்டதுமே மூன்றாம்கட்டப்பணிகள் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிய வருகின்றது. (உ-77)

# சட்டவைத்திய அதிகாரி தொடர்ந்தும் சாட்சியம்

(கொழும்பு)

உடத்தலவின்னவில் இடம்பெற்ற 10 முஸ்லிம் இளைஞர்களின் படுகொலைகள் சம்பந்தமான வழக்கில் தொடர்ந்தும் சாட்சியமளித்து வரும சட்ட வைத்திய அதிகாரி அசோக பண்டார செனவரட்ன கடந்த செவ்வாய் அன்று சாட்சியமளிக்கையில், தான் பிரேத பரிசோதனை செய்த முகமட் சாலி முகமட் றசாலின் உடலில் துப்பாக்கி ரவைகள் காணப்பட்டதாகவும், அவரது காயம் ஒன்றிலிருந்து ஆயிரத்து 500 மில்லி லீற்றர் இரத்தம் கசிந்துள்ளதாகவும் அதிக இரத்தக் கசிவினால் அவரது மரணம் சம்பவித்ததாகவும் தெரிவித்துள்ளார்.

றசாலின் உடலின் வலது தோளில் ஒரு காயமும்,நெஞ்சின் வலது புறத்தில் ஒரு காயமும் காணப்பட்டது எனத் தெரிவித்த அவர்,சகல காயங்களும மரணத்தை விளைவிக்கக்கூடிய காயங்கள் எனவும் தெரிவிததுள்ளார்.

கொலை செய்யப்பட்ட 10 இளைஞர்களின் பிரேதங்களையும் பரிசோதனை செய்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

றசாலின் சடலத்திலிருந்த 10வது காயத்தில் காணப்பட்ட துப்பாக்கி ரவையை தெல்தெனிய நீதிவானிடம் ஒப்படைத்ததாகவும் இவர் தெரிவித்துள்ளார். (உ)

# கட்சித்தலைவர்களுடன் பிரதமர் ஆலோசனை

(கொழும்பு)

குற்றச்செயல்களை கட்டுப்படுத்துவது தொடர்பாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கட்சித்தலைவர்களுடன் ஆலோசனை நடத்தவுள்ளார்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுபவர்கள் 24 மணி நேரத்திற்குள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்படல் வேண்டும். ஆனால், தற்போதைய சூழ்நிலையில் இதற்கான கால எல்லை போதாமல் இருப்பதனால்,அதனை நீடிப்பது, அமுல்படுத்துவதற்கு நேர நீடிப்பு சட்ட வரைபை பாராளுமன்றத்தில் கொண்டு வருவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட வுள்ளதாக பிரதம வட்டாரங்கள் தொரிவித்துள்ளன. (தி)

# திருக்கேதீஸ்வர ஆலயச் சூழலில் மீளக்குடியமர்வுக்கு அமைச்சர் மகேஸ்வரன் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

மன்னார் திருக்கேதீஸ்வர ஆலயப்பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு வேண்டிய முதற்கட்ட நடவடிக்கைகளை இந்து சமய விவகார அமைச்சரும்,யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான தியாகராசா மகேஸ்வரன் மேற்கொண்டு வருகிறார்.

திருக்கேதீஸ்வர ஆலயச்சூழலில் இருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது மீள் குடியேற்ற அமைச்சரிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைய, அமைச்சர் மகேஸ்வரன், வன்னிப் பிராந்திய இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் சந்திரபால மற்றும் மன்னார் அரசாங்க அதிபர் எஸ். விஸ்வலிங்கம் ஆகியோருடன் இவ்விடயம் பற்றி விரிவாக கலந்துரையாடினார்.

அத்துடன்,இப்பிரதேச மக்களை மீளக்குடியேற்றுவதற்குத்தேவையான பொருத்தமான நடவடிக்கைகளைத் தாமதமின்றி எடுக்குமாறும் அமைச்சர் சகல அதிகாரிகளையும் கேட்டுக கொண்டுள்ளார்.

இதேவேளை,யுத்தத்தினால் இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகியிருந்த திருக்கேதீஸ்வர ஆலய கும்பாபிஷேக வைபவம் பலவருட இடைவெளிககுப் பின்னர் சென்ற வாரம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த கும்பாபிஷேக நிகழ்ச்சிகளில் அமைச்ச் மகேஸ்வரன் கலந்து கொண்டார். (த)

# இராசி பலன்

**11. 07. 2003**
**(ஆனி 27, வெள்ளி)**

| | |
|---|---|
| திரயோதசி | பி.இ.3.22 வரை |
| கேட்டை | பி.இ.3.18 வரை |
| இராகுகாலம்- | 10.29-11.59 |
| சுபநேரம்- | 5.59-7.29 |

**மேடம்**
வீண்தொல்லை, வாகன பயம், போசன சுகம், ரோக பயம்.

**இடபம்**
சென்ற இடத்தில் செல்வாக்கு, அபுர்வ சந்திப்பு, வருமானம் அதிகரிக்கும், காரிய சித்தி.

**மிதுனம்**
சத்துருஜெயம், திடீர் பயணம், சுகவாழ்வு, காரிய நன்மை.

**கடகம்**
வியாபார நன்மை, தாழ்ந்த சுபாவம், புத்திரரால் கவலை, முயற்சி தாமதம்.

**சிங்கம்**
கல்வியில் ஆர்வம், அறப்பர்நேசம், பயந்த சுபாவம், நல்லமுயற்சி.

**கன்னி**
அன்னியர் உதவி, இனிய சம்பவம், வாக்கு மேன்மை, தனவரவு.

**துலாம்**
மதிப்புக்குறைவு, மாதர்நட்பு, புதிய திருப்பம், தனவிரயம்.

**விருச்சிகம்**
நல்ல முயற்சி, பெரியோர் ஆசி, ஆழ்ந்த சிந்தை, புதிய பொருள் சேர்க்கை.

**தனுசு**
பிதாசிந்தை, மனக்கிலேசம், வேலைக் கஷ்டம், முயற்சி தாமதம்.

**மகரம்**
தெய்வ தரிசனம், தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, பொருள் சேர்க்கை.

**கும்பம்**
கடின முயற்சி, நல்லசெய்தி, பிறர் உதவி, உற்சாகம்.

**மீனம்**
ஆன்றோர் மதிப்பு, உடல் உழைப்பு, வயிற்று வலி, முயற்சி தாமதம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

# கடமை தவறும்பொலிஸ் அதிகாரிகள் சீருடைகளைக்களையவேண்டும்

## உள்துறை அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

தமது கடமைகளை சரிவர நிறைவேற்ற முடியாத பொலிஸ் அதிகாரிகள் தமது சீருடைகளை கழற்றி வைத்து விட்டு வீட்டுக்குச் செல்ல வேண்டும் என உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,பொலிஸ் சேவைக்கென பெருந்தொகையான பணம் செலவிடப்படுகின்றது.

இதனால், அவர்கள் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்யவேண்டும். அத்துடன்,அரசியல் தலையீடுகள் இன்றி பொலிஸ் சேவையை நடத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொலிஸ் ஆணைக்குழு விரைவில் அமைக்கப்படவுள்ளது. குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் நாட்டின் பல பாகங்களிலும் விசேட பொலிஸ் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இக்குழுவினர் தமது கடமைகளை ஒழுங்காக நிறைவேற்றி வருவதன் மூலம் பல கொள்ளை மற்றும் கொலைச்சம்பவங்களுடன் தொடர்புடைய குற்றவாளிகள் கைது செய்யப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார். (தி)

## லண்டன் சென்று பாலாவைச் சந்திக்க

# தமிழ்ச்செல்வனுக்கு அனுமதி மறுப்பு தமிழ்மக்கள் கடும் விசனம்

(யாழ்ப்பாணம்)

லண்டனில தங்கியுள்ள விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்து கலந்தாலோசிப்பதற்கு, விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கு பிரிட்டிஷ் தூதரகம் அனுமதி மறுத்துள்ளது.

புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டிருக்கின்றபோதும், சட்டபூர்வமான பேச்சு வார்த்தைகள், கலந்துரையாடல்களைத் தடுக்கும் நோக்கில் இவ் அனுமதி மறுக்கப்படவில்லை என்றும் கொழும்பிலுள்ள பிரிட்டிஷ் தூதரகம் தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கம் லண்டனில் தடைசெய்யப்பட்டுள்ள அமைப்பு என்ற போதிலும் பிரிட்டிஷ் அதிகாரிகள் அவர்களை சந்திக்கின்றனர். அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். அவ்வாறிருக்க தமிழ்ச்செல்வன் லண்டன் செல்வதற்குரிய விசாவை மட்டும் ஏன் பிரிட்டிஷ் தூதரகம் மறுக்க வேண்டும் என தமிழ்மக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதுவிடயம் தொடர்பாக பிரிட்டிஷ் தூதரகம் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

சமாதானப் பேச்சுவாத்தையை தடைசெய்யும் நோக்கம், எண்ணம் எமக்கு இல்லை. பிரிட்டிஷ் அரசாங்கம் சட்டபூர்வமான எல்லா சமாதானப் பேச்சுவார்த்தைகளையும் ஆதரிக்கின்றது.

பேச்சுவார்த்தையுடன் தொடர்புபட்ட வகையில் தமிழ் மக்களின் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படுமாயின் இவ்வாறான சந்திப்புக்களை மேற்கொள்வதற்கு தாம் பின்நிற்கப் போவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளது. (உ-15)

## ருகுணு பல்கலைக்கு எதிராக நீதிமன்றில் மனுத்தாக்கல்

(கொழும்பு)

ருகுணு பல்கலைக்கழகத்திற்கு எதிராக கொழும்பு உயர்நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழகம் அடிப்படை மனித உரிமைகளை மீறியுள்ளதாக குற்றஞ்சாட்டப்பட்டு பேராசிரியரான சந்திர சிறிநிருபல்ல என்பவரே இம் மனுத்தாக்கல் செய்துள்ளார்.

தென்பிராந்தியப்பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தின் அடிப்படையில் பல்கலைக்கழக நிர்வாகம் தனக்கு எச்சரிக்கை விடுக்கத் தீர்மானித்துள்ளது என அம்மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயத்தின் அடிப்படையில் தனக்கு எச்சரிக்கை விடுப்பதற்கு ருகுணு பல்கலைக்கழகத்திற்கு எந்தவித சட்டபூர்வ உரிமையும் இல்லை எனவும் அம் மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (தி)


வலம்புரி தரம் பத்து மாணவர்களுக்கு நடத்திய கட்டுரைப்போட்டி முடிவுகள்

14.07.2003 திங்கள் வெளிவரும் என்பதை அறியத்தருகின்றோம்.



மாநகரசபை யாழ்ப்பாணம்

**கேள்வி அறிவித்தல் - 2003**

கீழ்க்குறிப்பிட்டுள்ள வீதி வேலைகளுக்கான கேள்விகள் "இக்ராட்" நிறுவனத்தில் தரம் - 09 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து என்னால் கோரப் படுகின்றன.

**கேள்விப் பத்திரங்கள் வழங்கப்படும் கடைசித் திகதி** - 23.07.2003 பி.ப. 3.00 மணி
**கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி** - 25.07.2003 ந.ப. 12.00 மணி
**கேள்விகள் திறந்து பரிசீலிக்கும் திகதி** - 25.07.2003 பி.ப. 2.00 மணி

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப் பத்திரங்கள் யாவும் அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் வைக்கப்பட்டு மாநகர ஆணையாளர், மாநகர சபை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டுக் கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும். கடைசித் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது இதற்கென இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். கேள்விப் பத்திரத்தைக் கொண்டுள்ள கடித உறையின் இடது பக்க மூலையில் கேள்வியின் பெயர் குறிப்பிட வேண்டும்.

மேலதிக விபரங்கள் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

| வேலையின் பெயர் | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புக் கட்டணம் | மீளளிக்கப் படாத கேள்விப் பத்திர கட்டணம் உட்பட |
|---|---|---|
| 01. கொழும்புத்துறை 1ஆம் குறுக்குத்தெரு. | 2000/- | 300/- |
| 02. கொழும்புத்துறை 2ஆம் குறுக்குத்தெரு. | 2000/- | 300/- |
| 03. கொழும்புத்துறை 4ஆம் குறுக்குத்தெரு . (மதகு உட்பட) | 2000/- | 300/- |
| 04. உப்புக்குளம் வீதி, கொழும்புத்துறை. | 2000/- | 300/- |
| 05. கொழும்புத்துறை 5ஆம் குறுக்குத்தெரு. | 2000/- | 300/- |
| 06. சுவாமியார் வீதி கிழக்கு ஒழுங்கை. | 2000/- | 300/- |
| 07. சென்ஜேம்ஸ் மகா வித்தியாலய வீதி, குருநகர். | 2000/- | 300/- |
| 08. ஓடக்கரை வீதி. (2 மதகு உட்பட) | 2000/- | 300/- |
| 09. புதுமை மாதா கோவில் வீதி, குருநகர். | 2000/- | 300/- |
| 10. றெக்கிளமேசன் 2ஆம் குறுக்குத்தெரு. | 2000/- | 300/- |
| 11. சென் ஜேம்ஸ் கிழக்கு வீதி, குருநகர். | 2000/- | 300/- |
| 12. நீர்த்தாங்கி 1ஆம் குறுத்குத்தெரு, குருநகர். | 2000/- | 300/- |
| 13. நீர்த்தாங்கி 5ஆம் குறுக்குத்தெரு, குருநகர். | 2000/- | 300/- |
| 14. அருளம்பலம் லேன். | 2000/- | 300/- |
| 15. பொன்னம்பலம் வீதி. | 2000/- | 300/- |
| 16. நெடுங்குளம் வீதி. (பகுதி) | 2000/- | 300/- |
| 17. சின்னாலங்கண்டு வீதி. | 2000/- | 300/- |
| 18. குகன் வீதி. | 2000/- | 300/- |
| 19. முள்ளி வீதி. | 2000/- | 300/- |
| 20. ஆள்காட்டி லேன். | 2000/- | 300/- |
| 21. அம்பாள் வீதி, நாயன்மார்க்கட்டு. | 2000/- | 300/- |
| 22. பெஸ்கி சனசமூக நிலைய ஒழுங்கை. | 2000/- | 300/- |
| 23. தேவரிக் குளம் லேன். | 2000/- | 300/- |
| 24. சீனிவாசகம் வீதி. | 2000/- | 300/- |
| 25. பாங்சால் வீதி (பகுதி) | 2000/- | 300/- |

*மாநகரசபை,*
*யாழ்ப்பாணம்.*

(C/6401)

இ.இராமலிங்கம்
மாநகர ஆணையாளர்.



5வது பிறந்த நாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY



10.07.2003

செல்வன் சி.ஜகேஸ்கர்

திரு. திருமதி சிவாகர் மைதிலி தம்பதியினரின் செல்வப் புதல்வன் செல்வன் **சி.ஜகேஸ்கர்** அவர்களை பல்கலையும் பெற்று வளமுடன் என்றும் இனிது வாழ்கவென அப்பா, அம்மா தாத்தா, அம்மம்மா, பெரியமாமா, சின்னமாமா ஆகியோர் வாழ்த்துகின்றார்கள்.

தெஹிவளை.

சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

(C/6400)



## அழைப்புக் கட்டளை

**(இல.16 - பிரிவு 55 (1) )**

யாழ்ப்பாணம் என்னுமிடத்திலுள்ள மாவட்ட/நீதிமன்றத்தில்

**சேஜின் லலின் பெண் சாமினி,**
**2, ஈச்சமோட்டை வீதி,**
**சுண்டுக்குளி.**

வழக்கு இல: மணநீக்கம்/377 வழக்காளி

எதிர்

**நவரட்ணம் சேஜின் லலின்,**
**25/2, புங்கன்குளம் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

எதிராளி

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள எதிராளிக்கு

மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள வழக்காளி

எதிராளிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து வழக்காளிக்கும், எதிராளிக்கும் இடையில் நடைபெற்ற திருமணப் பதிவை ரத்துச் செய்யக் கோரி இந்நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடுத்துள்ளராதலினால், அதற்கு உமது மறுமொழி, ஏதேனும் இருப்பின், 2003ஆம் ஆண்டு ஆடி மாதம் 22ஆம் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவீர் தேவைப்படுத்தப்படுவதோடு, சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவீர் மறுமொழி கோப்பிடத் தவறும் சந்தர்ப்பத்தில், வழக்கானது மறு கட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடாத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவீர் இத்தால் தேவைப்படுத்தவும் படுகின்றீர்.

பதிவுபெற்ற தரணிமூலம் நீர்தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விபரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவீர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

*வரைந்தது*
**இ.ஜெயசிங்கம்**
*வழக்காளியின் சட்டத்தரணி*

*நீதிமன்றக் கட்டளைப்படி*
**து.சிறீமோகன்**
*பதிவாளர்,*
*மாவட்ட நீதிமன்றம்,*
*யாழ்ப்பாணம்.*

குறிப்பு:- விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவீர் பெற விரும்பினால், பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்தவுமாறும், பதிவஞ்சல் மூலம் அனுப்பிவைப்பதற்காகும் செலவை மேவுவதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவீர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

**து.சிறீமோகன்**
கையொப்பம்: பதிவாளர்

(7252)

2003 ஆம் ஆண்டு ஆடி மாதம் 09ஆந் நாளாகிய இன்று

வெள்ளி முற்றம்

# வித்தியாசமானவன்

இ.தியாகராசா
நீர்வேலி

எங்கள் வீட்டுக்கு முன்பாக இராணுவம் சோதனைச்சாவடி போடுகிறது என்று கிணற்றடியில் குளித்துக் கொண்டு நின்ற என்னிடம் என் மனைவி ஓடி வந்து சொன்னாள். குளிக்கும் போது கட்டியிருந்த ஈரத் துவாயைக்கூட மாற்றாது எட்டிப் பிரதான வீதியைப்பார்த்தேன். அங்கு நான் கண்ட காட்சி என் இதயத்தை ஒரு கணம் நிறுத்தி பின் ஓட வைத்தது.

பல இராணுவ வீரர்கள் ஓர் சோதனைச் சாவடியை என் வீட்டுக்கு முன்னால் அமைப்பதில் சுறுசுறுப்பாக உழைத்துக்கொண்டிருந்தார்கள். மண்மூட்டைகள் கட்டி அடுக்கப்பட்டன. வெற்றுப்பீப்பாக்கள் கொண்டு வரப்பட்டன. கொங்கிறீற் கற்கள் அடுக்கப்பட்டன. சில மணி நேரத்துள் என் வீட்டின் முன்னால் உள்ள பிரதான வீதியில் ஒரு இராணுவச்சோதனைச்சாவடி உருவாக்கப்பட்டு விட்டது. ''நான் அப்பவே சொன்னான் பிரதான றோட்டில் வீட்டைக்கட்டாதேயுங்கோ என்று. கேட்கமாட்டன் என்டியள், இப்ப பாருங்கோ இனி எங்கள் சொந்த வீட்டில் கூட நிம்மதியாக நித்திரை கொள்ள முடியாத நிலை'' என் மனைவி பொரிந்து தள்ளினாள்.


''உண்டிம் என்ன குமர்ப்பிள்ளை இருக்கே. ஏன் பயப்படுகிறாய். அவங்க எங்களைப் பிடித்தே தின்னப் போகிறான்கள். உள்ளது ஒரே பையன் அவனே ஏழு வயதுச் சிறுவன் அவனைப்புலி என்றாபிடிக்கப் போகிறார்கள்'' என்றேன். எங்கள் வீட்டு வாசலில் அமைத்த சோதனைச் சாவடியில் ஐந்து இராணுவ வீரர்கள் கடமை புரிந்தனர். இரண்டு இராணுவ வீராங்கனைகள் பெண்களை சோதிப்பதற்காக இருந்தனர்.

காலையில் இருந்து வீதியால் போவோர் வருவோர் எல்லோரையும் வாகனங்களையும் துருவித் துருவிச் சோதிப்பார்கள். வாகனத்தில் சாப்பாடு எல்லோருக்கும் வரும் உணவை எல்லோருமாக எங்கள் வீட்டில் வைத்துச் சாப்பிடுவார்கள், சாப்பிட்டு முடிந்ததும் எங்களிடம் நீர் கேட்டு அருந்துவார்கள். அந்த இராணுவ வீரர்களுள் ஒரு அழகான இளைஞன் இருந்தான். அவன் பெயர் தாமரகுமார கண்டியைச் சேர்ந்தவன்.நன்றாக தமிழ் பேசுவான் .கண்டியில் இருக்கும் மலையகத் தமிழ் இளைஞர்களுடன் சினேகிதமாக இருந்ததால் தான் தமிழ் பேச தெரிந்து கொண்டதாகக் கூறினான்.

இடைக்கிடை வீட்டுக்கு வருவான். எங்கள் வீட்டில் மாமரங்கள் ,கொய்யா மரங்களும் காய்த்திருந்தன. தாமரகுமார அவற்றில் ஏறி தன் சீருடை பைக்கட் நிரம்ப மாங்காய்களையும், கொய்யாக்காய்களையும் பிடிங்கிப்போட்டுக்கொண்டு இறங்குவான். எங்களுக்கும் சிலவற்றைத்தந்து விட்டு மீதியை சோதனைச்சாவடியில் நிற்கும் தன் நண்பர்களுக்கு கொடுப்பான் அவனுடன் வரும் சிங்கள வீர் அங்கிள் தாமரகுமார தமிழ் சிங்களம் இல்லை என்பார்கள். நாங்கள் சிரிப்போம். அவனும் சிரிப்பான்.

என் 7வயது மகன் மீது தாமரகுமார உயிரை வைத்திருந்தான். அடிக்கடி வந்து அவனைத் தூக்கி வைத்துக்கொள்வான். எங்கள் மகன் தம்பியாரைப் போல் இருக்கிறான் என்று அவன் மீது மிகப் பாசமுடன் இருந்தான். அடிக்கடி இனிப்புக்கள்,கன்டோசுகள் கொண்டு வந்து கொடுப்பான். எங்கள் மகனும் ஆமி மாமா, ஆமிமாமா என்று தாமரகுமாரவுடனேயே பெரும் பொழுதைக் கழிப்பான்

'' என்ன பேசாமல் இருக்கிறீர்கள். இம்முறை தீபாவளிக்கு புது




உடுப்புக்கள் எடுக்கவில்லையோ?'' என்று தீபாவளிக்கு முதல் நாள் தான் என்மனைவி கேட்டாள். அதற்கென்ன இன்றே யாழ்ப்பாணம் போய் எடுத்து வருகிறேன். கெதியில் சாப்பாட்டைத் தாரும் என்றேன். காலைச்சாப்பாட்டை முடித்துக் கொண்டு கையில் கொஞ்ச பணத்தையும் எடுத்துக்கொண்டு மனைவியுடன் றோட்டுக்கு வந்தேன். என் மகன் தாமரகுமாரவுடன் காவல் சாவடியில் நின்றான்.''தாமரகுமார! தம்பியையும் கொஞ்சம் பார்த்துக் கொள்ளும். நாங்கள் ரவுணுக்கு போய் உடுப்பு எடுத்துக்கொண்டு வருகிறோம்''

''சரி அங்கிள் வரும்போது எனக்கும் புதுச்சாரம் வாங்கி வாங்க, தம்பிக்கும் சூட் வாங்கி வாங்க'' என்றான் தாமரகுமார.''அப்பா நான் ஆமிமாமாவுடன் இருக்கிறேன். நீங்கள் போய் வாருங்கள்'' என்றான். ''அன்ரி எங்களுக்கு மடிசார் வாங்கி வாருங்கோ என்றனர் என் மனைவியைப் பார்த்து பெண் இராணுவத்தினர்.

வீதியில் பஸ் தரிப்பிடத்திற்குப் போனதும் ஒரு மினிவான் வந்து எங்கள் பக்கத்தில் நின்றது.அதில் நிற்பதற்குக்கூட இடமில்லை. வான் நடத்துனர்,

''ஐயா வசதியாக ஏறுங்கோ பஸ் இப்போ வராது என்று நெருங்கினான். அந்த வானில் போக விருப்பமில்லை. அடுத்த பஸ்ஸில் போகலாம் என்று எண்ணினேன்.

பிள்ளையையும் தனிய ஆமிக்காரரிடம் விட்டு விட்டு வந்து விட்டோம். வந்து மத்தியானம் சமையலும் பார்க்கவேண்டும். லீவான பஸ் வருமென்று காத்திருந்தால் இப்போதைக்கு யாழ்ப்பாணம் போகேலாது. ஏறுங்கோ உதிலை என் மனைவியும் கூறினாள். வேறு வழியின்றி மனைவியையும் ஏற்றிவிட்டு, மனைவியை நின்ற சனத்தை விலத்தி ஒரு மாதிரியா உள்ளே அனுப்பிவிட்டு நான் மட்டும் புட்போட்டில் நின்றேன். வான் யாழ்ப்பாணம் நோக்கிப் புறப்பட்டது. பின்னால் ஒரு பஸ் வந்தது. அட அதில் ஏறியிருக்கலாமே. எதற்கும் அவசரம் கூடாது என்று எண்ணியபடி வானில் நின்றேன்.

பஸ்ஸைக்கண்ட வான் சாரதி வானின் வேகத்தைக் கூட்டினான். வான் படு வேகமாகப் பறந்து சென்றது. புட்போட்டில் ஒரு கையால் கைப்பிடியைப் பற்றியபடி மற்றவர்களுடன் நான் நின்றேன். பின்னால் வரும் பஸ் முந்த விடக்கூடாது என்பது மட்டுமே வான்சாரதியின் குறிக்கோள். வான் விமானம் போல் பறந்து கொண்டிருந்தது.

எதிரில் தெரிந்த ஒரு முடக்கில் வானை வேகமாகத் திருப்பும்போது வான் பிரளும் போல் இருந்தது. என் கைப்பிடி நழுவியது. அடுத்த கணம் நான் தூக்கி வீசப்பட்டது தான் தெரியும். அதன் பின் நடந்தது எனக் குத் தெரியாது.

நான் எங்கே படுத்திருக்கிறேன் என்று எனக்குத்தெரியவில்லை. ''கறகற'' என்ற சத்தம் மட்டும் கேட்கிறது. கஷ்டப்பட்டு கண்ணை முழித்துப் பார்க்கிறேன். மேலே மின் விசிறிசுழலுகிறது,லைட்டுகள் பிரகாசமாக எரிகின்றன. என் தலை பாரமாக இருக்கிறது. தலையைத்திருப்ப முடியவில்லை. தலையைச்சுற்றி கட்டுப் போட்டிருக்கிறார்கள். ''எனக்கு என்ன நடந்தது'' வாய் விட்டு கேட்கிறேன். மெதுவாக என் நினைவுகள் திரும்புகின்றன.

வானில் வரும் போது நான் கை தவறிவிழுந்தது. இப்போ போதனா வைத்திய சாலையில் நான் இருக்கிறேன். என்னைச்சுற்றிக் கட்டில்கள். அவைகளில் என்போன்ற காயக்காரர்கள். நான் படுத்திருப்பது முறிவு நெரிவு வாட் என்று என்னால் தெரிந்து கொள்ள முடிந்தது. எழுந்திருக்க முயற்சித்துப் பார்க்கிறேன். என்னால் முடியவில்லை. அப்போது யாரோ வந்து என் கையைப்பிடித்தார். யார் என்று தெரியவில்லை. ''அங்கிள் எழுந்திருக்கக்கூடாது என்று டாக்டர் சொல்லியிருக்கிறார். படுத்திருங்கள்'' என்று கூறினார். தெரிந்த குரல் யார் என்று என் தலையை திருப்பிப் பார்த்தேன். தாமரகுமார இராணுவ உடையில் நின்று கொண்டிருந்தான்.

''என்ன தம்பி நடந்தது'' என்று தாமரகுமாரவைபார்த்துக்கேட்க,

அங்கிள் தீபாவளி நீங்கள் உடுப்பு எடுத்து வந்தீங்க.வானிலே அப்போ கை வழுக்கி கல்லுமேலே விழுந்திடடீங்க. அதனாலே உங்க தலை மேலே பலத்த அடி ,மண்டை உடைஞ்சு ரெம்ப இரத்தம் ஓடியிட்டுது. உடனே அன்ரி ஒரு ஆட்டோ பிடிச்சு இங்கே கொண்டு வந்திட்டாங்க. நானும் இதை அறிஞ்சு ஒரு மோட்டார் சைக்கிளில் ஏறி ஆஸ்பத்திரிக்கு வந்திட்டேன்.

''அப்புறம் என்ன நடந்தது தம்பி'' உங்களை அவசர சிகிச்சைப் பிரிவில் போட்டு விட்டார்கள்.அன்ரி என்ன செய்வது என்று அழுது கொண் டிருந்தா. அந்த நேரத்தில் தான் நானும் இவ்விடம் வந்து சேர்ந்தேன். ஆஸ்பத்திரி தாதியர் அன்ரியிடம் வந்து 'நீங்கள் தானே விபத்தில் காயப்பட்டவரை ஆஸ்பத்திரியில் அனுமதித்தனீங்கள். நாங்கள் சொல்லுவதை கவனமாகக் கேளுங்கள்... இப்போ அவசரமாக O பிரிவு இரத்தம் வேண்டும். இரத்தம் ஏற்றாவிட்டால் அவரின் உயிருக்கு ஆபத்து. எங்கிருந்தாவது Oபிரிவு இரத்தம் எடுக்க ஆள் கூட்டி வாருங்கள் என்றனர்.

அன்ரி என்ன செய்வது என்று தெரியாது அழுது கொண்டு நின்றா. அழுது ஒன்றும் பிரயோசனமில்லை. உங்கள் கணவர் உயிர் தப்ப வேண்டும் என்றால் அவசரம் இரத்தம் ஏத்த வேண்டும் என்று சொல்லி விட்டு தாதியர் சென்று விட்டனர்.

எனது இரத்தம் ''O ''பிரிவு இரத்தம். அப்போது தான் எனது மனத்தில் ஞாபகம் மின்னல் போல் அடித்தது. அன்ரி ஒன்றுக்கும் பயப்படாதீர்கள். இதோ ஒரு நொடியில் இரத்தம் ஏறறி விடலாம். அங்கிள் ஒரு ஆபத்துமின்றி தப்பி விடுவார் என்று அன்ரியிடம் கூறிவிட்டு தாதியர் பின் சென்று சொன்னேன்.

''நான் இரத்தம் தருகிறேன்'' என்றேன். உங்கள் இரத்தம் ''O பிரிவா'' ''ஆம் நான் இராணுவத்தைச் சேர்ந்தவன்.அதனாலே என் இரத்தத்தை ஏற்கனவே சோதித்து வைத்துள்ளனர்!''

உடனடியாக என் இரத்தம் எடுக்கப்பட்டு உங்களுக்கு ஏற்றப்பட்டது என்றான் தாமரகுமார.அப்போது அஙகே வந்த என் மனைவி கண்ணீர் மல்க கூறினாள் .

ஏதோ அந்தக் கதிர்காமக்கந்தனின அற்புதம். இந்தத்தம்பி இரத்தம் தந்திராவிட்டால் உங்களை நான் இப்போ உயிருடன் பார்த்திருக்க முடியாது என்றாள் என் மனைவி. என் கணவனுக்கு தாமரகுமார சிங்கள இளைஞன் போலவோ அல்லது ஒரு இராணுவ வீரன்போலவோ தெரியவில்லை. நான் பெற்ற பிள்ளை போலவே தென்பட்டான். அவன் புன் சிரிப்புடனே நின்றான் அவன் பிறரைவிட வித்தியாசமானவன்.

(யாவும் கற்பனை)

---

அரசு~ புலிகளிடையே

# பொது இணக்கம் ஏற்படும்வரை உயர் பாதுகாப்பு வலயங்களில் மாற்றமில்லை

(கொழும்பு)

அரசாங்கம் விடுதலைப்புலிகளுடன் மேற்கொண்டு வருகின்ற சமாதான முயற்சிகளில் ஓர் பொது இணக்கப்பாடு ஏற்படும் வரை அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான எந்த முடிவும் எடுக்க முடியாதென அரசு கருதுவதாகத் தெரியவருகின்றது.

இது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

யாழ்.சுபாஸ் ஹோட்டல் மற்றும் ஞானம்ஸ் ஹோட்டல் ஆகியவற்றில நிலைகொண்டுள்ள இராணு வத்தினரை இடம்மாற்றவென முயன்று,மூன்று மாற்று இடங்களையும் பார்வையிட்டோம்.

ஆனால் புலிகள் இயக்கம் அந்த மூன்று இடங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவித்ததுடன், அவர்கள் கூறும் இடத்திற்கு நாம் இடம் மாற வேண்டும் என எதிர்பார்க்கின்றனர்.

அவர்கள் கூறும் இடத்திற்குச் செல்ல நாம் தயாராக இல்லை.

அத்துடன், இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதி லெப் ஜெனரல் சதீஸ்நம்பியார் அதியுயர் பாதுகாப்பு வலயம் தொடர்பாக அரசிடம் சமர்பபித்த அறிக்கை குறித்து இதுவரை எவ்விதமான முடிவுகளையும் அர சாங்கம் எடுக்கவிலைஎனத் தெரி வித்துள்ளன. (உ-8)

---

அமைச்சர் வீட்டில்

# கைக்குண்டு வீச்சுச் சம்பவம் விசாரணைகள் ஆரம்பம்

வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்காவின வீட்டின்மீது நடத்தப்பட்ட கைககுணடுத்தாக்குதல் சம்பவம் தொடர்பாக துரிதமான விசாரணைகள் மேற கொள்ளப்பட்டு வருவதாக மேல் மாகாண தென்பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப்பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளவென 4 விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக் கப்பட்டுள்ளன.

கைக்குண்டு வீச்சுத்தாக்குதல் சம்பவத்தில் படுகாயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று பாதுகாப்புப் பிரிவு அதிகாரியிடம் இருந்து பெறபபட்ட வாக்குமூலத்தில் இந்தச் சம்பவம் தொடர்பான பல தகவல்கள் வெளியாகியுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அமைச்சரின் பத்திரமுல்ல வீட்டில கடந்த திங்கட்கிழமை இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டு வீச்சுமேற கொள்ளப்பட்டதுதெரிந்ததே. (தி)

---

# அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு நிதி ஒதுக்குக!

பிரதமர் நிதி அமைச்சருக்கு உத்தரவு

(கொழும்பு)

அடுத்த ஆண்டுக்கான பன் முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தில் அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்குத் தேவையான நிதியை ஒதுக்குமாறு ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் கே. என்.சொக் ஸிக்கு உத்தரவு பிறபபித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் பிரதமர் இவ் உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இக் கூட்டத்தில், கடந்த ஒன்றரை வருடங்களுக்குப் பின்னர் ஐக்கிய தேசிய முன்னணிஅரசாங்கத்துக்கு அதிக வெளிநாட்டு நிதி உதவிகள் கிடைத்துள்ளது.

அத்துடன், பொருளாதாரமும் குறிப்பிடக்கூடிய அளவு வளர்ச்சி கண்டுள்ளது. இப் பொருளாதார வளர்சசியின் அடிப்படையில் மக்களின தேவைகளை நிறைவேற்றுவது அரசாங்கத்தின் கடமை என நிதி அமைசசர் அங்கு சுட்டிக் காட்டியதை அடுத்தே பிரதமர் இவ் உத்தரவை பிறப்பித்துள்ளார். (தி)

---

மட்டக்களப்பு மாவட்டத்தில்

# தகவல் தொழில்நுட்பக் கிராமம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நவீன தகவல் தொழில்நுட்ப வசதிகள் கொண்ட கிராமம் ஒன்று அமைக்கப் படவுள்ளது.

மலேசிய அரசாங்கம் இதற்கான நிதிஉதவியினை வழங்கவுள்ளது.

இதுதொடர்பான உடன்படிக்கையில், அபிவிருத்தி அமைச்சர் ரவூப் ஹக்கீமின் அந்தரங்கச் செயலாளர் எம்.ரி.ஹசன் அலியும், மலேசிய அமைச்சர் அபூபக்கர் கெற்றும் அண்மையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இத்தகவல் தொழில்நுட்பக் கிராமத்தின் மூலம் ஆசியாவில் உள்ள 500கோடி மக்களுடன்உடனடியான தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முடியும் என்பதுடன், கல்வி மற்றும் வர்த்தக நடவடிக்கைகளுக்கு இது பெரிதும் உதவும எனத் தெரிவிக்கப்படுகிறது. (தி)

# கோயில்களில் பெண்கள் திருமுறை ஓதும் வழிவகுத்து எழுச்சியூட்டியவர் மணிவாசகர்

திருவாசகத்தில், 'சகம்பேய்' என்று தம்மைச் சிரிப்ப, நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை, பூணது வாகக் கோணுதல் இன்றி 'எனவும்' நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப, நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப' எனவும் வரும் மணிவாக்குகள் வாதவூரடிகளாருடைய அனுபவத்தை வெளிப்படுத்துவன. இன்று சமயாசாரியருள் ஒருவராகக் கொண்டாடுகிறோம். மணிவாசகனார் காலத்தில், அவருக்குச் சமய எதிர்ப்புகளும், இகழ்ச்சியும், பழித்துரைகளும் உலகவரிடமிருந்து கிளம்பியுள்ளன. 'உந்தாளுக்குப் பேய் பிடித்துவிட்டது. பேய்க்கூத்து ஆடுகிறாள்.' என்று எல்லாம் ஒரு சாரார் இகழ்ந்துள்ளார்கள்.

போற்றித் திருவகவலில் 'சமயவாதிகள் தத்தம் மதங்களில், அமைவதாக அரற்றி மலைந்தனர், மிண்டிய மாயாவாதம் என்னும், சண்டமாருதம் சுழித்தடித்து ஆர்த்து உலகாயதன் எனும் ஒண்திறல் பாம்பின், கலாபே தத்த கடுவிடம் எய்திட' எனப் பேசப்படுவதால், எதிர்ப்பு என்னும் சூறாவளிக் காற்றுப் புறப்புறச் சமயத்தவர்களுடைய புறங்கூறலாகும் எனக்கொள்ள இடமுண்டு.

அண்ட மாமுனிவர்களும் அடங்குவது பெண்களிடம். மாதரின் சமுதாயத்தில் சமய விழிப்புணர்ச்சியை ஊட்டவல்வர்கள் பெண்பாலர் என்னும் உள தத்துவ உண்மையை மணிவாசகனார் நன்குணர்ந்திருந்தார். அதனால் சைவ சமய ஆண்களைத் தட்டிஎழுப்பவும். புறமத கண்டனங்களைப் பொசுக்கிவிடவும் திருவாசகத்தில் தாய்க்குலத்தவர்க்குத் தனியிடம் தந்தார். சைவத் திருமுறைகள் பன்னிரெண்டில் ஏனைய திருமுறைகளுக்கு இல்லாத தனியான இச்சிறப்புத் திருவாசகத்திற்கே உரியது.

திருவாசகம் தவிர்ந்த ஏனைய திருமுறைகள் பெண்பாலரை விலக்கிவிடவில்லை, ஆனால் திருவாசகம் பெண்களுக்குக் கொடுத்த



முன்னுரிமையை முதன்மையை அவைகள் வகுத்துக்கொடுக்கவில்லை.

திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருத்தொள்ளேணம், திருவுந்தி, திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, திருச்சாழல் முதலிய திருவாசகச் செழும்பதிகங்கள் யாவும் பெண்கள் பாடும் பான்மையாகத் திகழுவன.சுவாமி சந்நிதானத்தில் நின்று ஆண் தன்னைப் பாவனை பண்ணி எப்படிப் பாடமுடியும்.

உதாரணத்திற்கு திருவம்பாவைப் பதிகத்தை எடுத்துக் கொள்வோம. திருவாசகம் என்னும் தேனின் உயிர்நாடியாக விளங்குவது திருவெம்பாவை, பொற் சுண்ணம் போன்றவை.

சுவாமி சந்நிதானத்தில் நின்று ஓர் ஆடவர், 'உன்னைப் பிரானாக்ப் பெற்றஉன் சீரடியோம், உன்னடியார் தாள்பணிவோம், ஆங்கு அவர்க்கே பாங்காவோம், அன்னவரே எம்கணவராவர்' என்று எப்

**வெள்ளி நற்சிந்தனை**

படி வேண்டுதல்செய்ய இயலும்,

அதேபோல, 'எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள் எம்கொங்கை நின் அன்பர் அல்லார்தோள் சேரற்க,' என்ற ஒரு பெண்மகள் செய்யப்பட வேண்டிய விண்ணப்பத்தை எப்படி ஒரு ஆடவர் பகரலாகும்?

இவை போல்வன ஏனைய திருவாசகத் திருப்பதிகங்களும் பெண்மைக்குரிய குணாதிசயங்களையோ செயற்பாட்டினையோ பண்பாட்டுப் பழக்க வழக்கங்களையோ பிரதிபலிப்பன. அதனால் பெண்கள் சந்நிதானத்தில் திருமுறை ஓதுதற்குரியவர்கள் அல்ல என்னும் கொள்கை மரபினை உடைத்தெறியும் முறையாகத் திருவாசகப் பதிகங்கள் பலவுள.

திருக்கோவில்களில் ஓதுவார் மூர்த்திகளாகப் பெண்கள் நியமமாக நிலைத்திருப்பதற்கு அவர்களுடைய உடல் அமைப்பு இயல்பு விலக்காகும் என்னும் உண்மை உலகப் பிரசித்தம். ஆனால் திருக்கோவில் பெருவிழாக்காலங்களில், விசேட தினங்களில் மகளிர் விரும்பின் திருமுறை ஓதற்குரியார்கள் என்னும் உரிமையைத் திருவாசகம் மூலம் திருவாதவூரடிகளார் நிலைநாட்டியுள்ளார்.

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருமுறைகளில், 'ஏ்பரந்தவின வெள்வளை சோர வென்னுள்ளங் கவர்கள்வன் 'சிறை யாரு மடக்கிளியேயிங்கேவா' போன்ற திருப் பதிகங்கள் பெண்மை பாடலாம் எனப் பேணுகின்றன.

அக்கருத்தை வலியுறுத்தும் வகையாக வாகீசருடைய 'சொன்மாலை பயில்கின்ற குயிலினங்காள்' எனத் தொடங்கும் திருப்பழனத் திருப்பதிகம்.

சுந்தரமூர்த்தி நாயனாருடைய, 'சூழும் ஓடிச்சுழன்றுழலும் வெண்ணரைகாள்-' எனவரும் திருவாரூர்த் திருப்பதிகம் மகளிர் மனவெழுச்

**சிவ.சண்முகவடிவேல்**

சியை வெளிப்படுத்தும்.

காரைக்காலம்மையார் திருமுறைப் பெண்பாற் புலமை உடையராவர்.

பாண்டிமாதேவியார் பாண்டியனைச் சமணத்தினின்றும் சைவ சமயத்திற்கு மீட்டருளிய சாதுரியர்.

திருநாவுக்கரசு நாயனாரை சைவ உலகிற்கு உருவாக்கித்தந்தவர் திலகவதியார்.

சைவ சமயத்திற்கு வேலியாகவும் சைவப் பயிரை வளர்ப்பவர்களாகவும் பெருந்தகைப் பெண்கள் விளங்குகிறார்கள். அத்தகு பெண்மணிகள் திருக்கோவில்களில் திருமுறை ஓத முன்நின்று உழைத்தவர் மணிவாசகனார் என்றால் அது மிகையாகாது. சமயாசாரியர் காட்டிய வழி நின்று ஒழுகுவோமாக. □

## கொலைப் பயமுறுத்தல்

(கொழும்பு)

சிறைச்சாலை ஆனையாளர் ரூமிமர்சூக்கிற்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பிரதேசசபை உறுப்பினர் சுனில் மென்டிஸ் கொலை செய்யப்படுவதற்கு முன்பு அவரைக் கைது செய்வதற்குத் தான் சூழ்ச்சிகளை மேற்கொண்டதாக கூறப்படுவதில் எந்தவொரு உண்மையுமில்லை என தெரிவிக்கும் ஆனையாளர், சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்றே சுனில் மென்டிஸுக்கு எதிரான வழக்கைத் தாம் கையாண்டதாக கூறியுள்ளார்.

ஆனால், அக் கொலையின் பின்பு குறுகிய அரசியல் இலாபங்களை நோக்காகக் கொண்ட சிலராலே தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (உ-15)

## காணி அபகரிப்பு பின்னணியில் ஐ.தே.க

(கொழும்பு)

சீதுவையில் உள்ள தலுகம எனும் பிரதேசத்தில் 100ஏக்கர் காணியை பலவந்தமாக சிலர் கைப்பற்றியதாகக் கூறப்படும் சம்பவத்தின் பின்னணியில் ஐக்கியதேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இருப்பதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக் குறித்து விசாரணைகள் நடைபெற்று வருவதாக ஐ.தே.கட்சியின் பொதுச் செயலாளர் செனரத் கப்புக் கொட்டுவ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மீது சுமத்தப்படும் மேற்படி குற்றச்சாட்டு உறுதிப்படுத்தப்பட்டால் அவரிற்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (உ-10)

# தேசிய விளையாட்டு விழா யாழில் இதில் எந்தமாற்றமும் இல்லை

## வி.துறை அமைச்சு அதிகாரிகள் தெளிவுபடுத்துகை

(யாழ்ப்பாணம்)

தேசிய விளையாட்டு விழாவை யாழ்ப்பாணத்தில் நடத்துவது என்ற முடிவில் எந்தவித மாற்றமும் இல்லை என விளையாட்டுத்துறை அமைச்சு அதிகாரிகள் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளனர்.

எதிர்வரும் ஒகஸ்ட்மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ள தேசிய விளையாட்டு விழாவின் முன்னேற்பாட்டு நடவடிக்கைகளின் பொருட்டு நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்த விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் மில்டன் அமரசிங்க, செயலாளர் புஞ்சிஹேவ ஆகியோர் யாழ்.செயலகத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில் மேற்கண்ட தகவலை வெளியிட்டனர்.

மேலதிக அரசாங்க அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம் போல், செயலகத்திட்டப் பணிப்பாளர் எஸ்.சிவபாதம், யாழ்மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே ரூபசிங்கம் ஆகியோர் பிரசன்னமாகியிருந்த இந்தச் செய்தியாளர் மாநாட்டில் மேலும் கருத்துத் தெரிவித்த விளையாட்டுத்துறை அமைச்சின் அதிகாரிகள்,

விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோவின் நேரடி அவதானிப்புகள், ஆராய்வுகள் என்பவற்றின் பிரகாரமே யாழ்ப்பாணத்தில் தேசிய விளையாட்டு விழாவை நடத்துவதென்ற முடிவு எடுக்கப்பட்டது.

அதற்கான நடவடிக்கைகள் எந்தவித தொய்வும் இன்றித் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த வகையில், முன்னேற்பாட்டு நடவடிக்களுக்காக இற்றைவரை 19.5மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன், தேர்ந்தெடுக்கப்பட்ட துரையப்பா விளையாட்டரங்கும் துரித கதியில் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், விளையாட்டு விழா வேறிடத்தில் நடத்தப்படும் என்ற சாரப்பட வெளிவருகின்ற செய்திகளை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

இவ்விடயம் தொடர்பில் எவ்வித பரிசீலனைகளோ, பரிந்துரைகளோ இற்றைவரை இல்லை,

விளையாட்டரங்கப் புனரமைப்பில் தாமதம் ஏற்படும் பட்சத்தில் சில வேளைகளில் விளையாட்டு விழாவைப் பிற்போடும் நிலை ஏற்படலாம். ஆனால், நாம் அவதானித்ததன்படி அதற்குக்கூட சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை.

யாழ்ப்பணத்தில் தேசிய விளையாட்டு விழாவை நடத்துவதில் தென்னிலங்கை மக்களிடத்தில் எவ்வித கருத்து முரண்பாடும் கிடையாது மாறாக அவர்களது ஆதரவு நாளுக்கு நாள் பெருகி வருகிறது.

மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து வருகின்ற இந்த வேளையில், இங்கு நடத்தப்படுகின்ற இந்த விளையாட்டு விழா, அவர்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தாவிட்டாலும், தேசிய ஒருமைப்பாட்டைக் கட்டிவளர்த்து, இனங்களுக்கிடையில் புரிந்துணர்வை ஏற்படுத்தும் விதத்திலேயே ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது என்பதை அனைத்துத் தரப்பினரும் புரிந்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டனர்.(உ-4)

# பழிவாங்கும் பொலிஸ் அதிகாரிகளின் விபரங்களை சேகரிக்கிறது ஸ்ரீ.சு.க.

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினருக்கு எதிராக நியாயமற்றதும் முறையற்றதுமான வகையில் சட்டங்களை அமுல் செய்யும் பொலிஸ் அதிகாரிகள் பற்றிய விபரங்களை மேற்படி கட்சி சேகரித்து வருகின்றது.

கட்சியின் மாத்தறை மாவட்ட எம்.பி.மங்கள சமரவீர, தகவல் பிரசாரபிரிவு சார்பாக சகல பொலிஸ் நிலையங்களுக்கும் இது தொடர்பில் கடிதங்களை அனுப்பியுள்ளார்.

பொ.ஐ.மு.ஜனநாயக அரசசொன்றை அமைக்கும் பட்சத்தில் இத்தகைய அதிகாரிகளுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


பொலிஸ் அதிகாரிகளை சட்டத்திற்கு முரணான நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் மற்றும் அவர்களை கடமைகளை செய்ய விடாது தடுத்தல் எனத் தலைப்பிட்டு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அக்கடிதத்தில் ஐ.தே.மு.அரசு பதவிக்கு வந்த பின்னர் பிரதமர், உள்துறை அமைச்சர், பிரதமரின் பிரத்தியேக செயலாளரும், முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவருமான சரத்சந்திரசேகர மற்றும் அமைச்சர்கள் எம்.பி.க்கள் அவர்களின் அனுசரணையாளர்கள் ஆகியோரே பொலிஸாரின் பணிகளில் தலையிட்டவர் களாவர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

மேலும், சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் துப்பாக்கிகள், வெடி குண்டுகளை வைத்திருக்கிறார்கள் என்று பொய்க் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு கைது செய்யப்படுகின்றனர்.

எதிர்க்கட்சியினர் செய்யும் முறைப்பாடுகள் பற்றி விசாரணைசெய்யப்படுவதில்லை. வேண்டுமென்றே தாமதிக்கப்படுகின்றன.

அரசியல்வாதிகளின் வேண்டுதல்களுக்கு செவிமடுத்து, நியாய மற்ற வகையில் சட்டத்தை பிரயோகிக்க வேண்டாம் என்று நாம் நியாயமாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

பொலிஸ் அதிகாரிகள் இன்றைய நெருக்கடியான கட்டத்தில் சட்டத்தை உள்ளபடியே அமுல் செய்தல் வேண்டும். ஊழல் விரையம் நடைபெறும் சந்தர்ப்பங்களில் அந்தரங்கமான முறையில் அவை பற்றி எமது கட்சியின் தகவல் பிரிவிற்கு தெரியப்படுத்துதல் வேண்டும் என்று அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)



நேற்றைய தினம் யாழ்ப்பாணம் விஜயம்செய்த விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பாளர் மில்ட்டன் அமரசிங்க மற்றும் செயலாளர் புஞ்சிகேவ ஆகியோரை யாழ். செயலகத்தில் வைத்து அரச அதிபர் செ.பத்மநாதன், மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலக நாயகம் போல் திட்டப் பணிப்பாளர் சிவபாதம் மற்றும் விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் திருமதி ரூபசிங்கம் ஆகியோர் கலந்துரையாடிய வேளையில் எடுக்கப்பட்ட படங்கள். (படங்கள்: க.பவன்)

## இடைக்கால நிர்வாகசபையில் பாரபட்சம் காட்டப்படுமானால்

# தமிழ் முஸ்லிம் மக்கள் மத்தியில் பிணக்குகள் ஏற்படுவதை தவிர்க்கவியலாது

## வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் முன்னெச்சரிக்கை

(கொழும்பு)

**சமாதானப் பேச்சுவார்த்தையில் எடுக்கப்படவிருக்கின்ற தீர்மானங்கள் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் சமாதான தீர்வைத் தரக்கூடிய வகையிலேயே அமையவேண்டும். அதனை விடுத்து பக்கச்சார்பான தீர்வாக அமையுமாக இருந்தால் இன்னும் சில பல ஆண்டுகளில் வடக்கு-கிழக்கில் முஸ்லிம்களுக்கும் தமிழர்களுக்கும் பிரச்சினை ஏற்பட இடமுண்டு. தலைமைத்துவம் அதற்கு இடம்கொடுத்துவிடக்கூடாது. இதுவே எனது கருத்தாகும்.**

இவ்வாறு தெரிவித்துள்ளார் வன்னிப் புனர்வாழ்வுப் புனரமைப்பு அமைச்சர் நூர்தீன் மசூர்.

பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன்தினம் வடக்கு-கிழக்கு மாகாண முஸ்லிம் பாராளுமன்ற ஒன்றியத்தின் விசேட கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்வு விடயங்கள் குறித்து பி.பி.ஸிக்குப் பேட்டியளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

இந்த நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ்நிலைக்கு 56ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட தனிச் சிங்களச் சட்டம் போன்ற சட்டங்களும் சிங்களப் பெரும்பான்மையும் குரோதங்களுமே காரணமாகும்.

இன்றைய காலகட்டம் விடுதலைப் புலிகளும் அரசாங்கமும் இந்த இடைக்கால நிர்வாகம் சம்பந்தமாக அரசியல் தீர்வு முன்னெடுக்கப்படும் காலகட்டமாக இருக்கின்றமையினால் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து முஸ்லிம்களின் தனித்தரப்பான கோரிக்கையை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம்.

இடைக்கால நிர்வாகம் சம்பந்தமான பேச்சுவார்த்தை மேசையில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக கலந்துகொள்ள வேண்டும் என்ற வேண்டுகோளை அரசாங்கத்திற்கு விடுப்பதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தில் தெரிவித்தார்.

நாமும் அதற்கமைய ஒரு தனித்தரப்பாக செல்வோமாக இருந்தால் நாம் எல்லோரும் ஒன்றிணைந்து ஒரே கோரிக்கையாக முஸ்லிம்களுக்கு வடக்கு-கிழக்கில் எவ்வாறான ஒரு தீர்வுத் திட்டம் அல்லது இடைக்கால நிர்வாகசபையிலே எமது பங்கு எவ்வாறு அமைய வேண்டும் என்பது பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்.

ஏற்கனவே முஸ்லிம் காங்கிரஸ் தரப்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையொன்றை தயார் செய்துள்ளார். அவ்வறிக்கை குறித்தும் நாம் ஒன்றிணைந்து ஆராய்ந்து அரசிடம் சமர்ப்பிக்கவுள்ளோம். முஸ்லிம்கள் வடக்கு-கிழக்கிலே தமிழ் மக்களுக்கு கிடைக்கின்ற அதேஅளவு சுய நிர்ணய உரிமையுடன் வாழ வேண்டும் என்பதும் தமிழ் மக்களுக்கு வழங்கப்படுகின்ற அதிகாரங்களுக்கு ஒத்ததாக முஸ்லிம்களுக்கும வழங்கப்படவேண்டும் என்பதுமே எமது கோரிக்கையாகும்.

இதில் அரசாங்கம் சில கருத்துக்களை முன்வைத்திருப்பதாகவும் அமைச்சர் ஹக்கீம் எம்மிடம் தெரிவித்தார். அந்த அடிப்படையிலே முஸ்லிம்களுக்கு எவ்வாறு உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோர் ஆராய்ந்து கொண்டிருக்கின்றனர்.

நடக்கவிருக்கின்ற அரசியல் தீர்வுக்கான பேச்சுக்களில் முஸ்லிம்கள் தரப்பில் நாமும் கலந்துகொள்ள வேண்டுமென்று கோரியிருக்கின்றோம். அந்தக் கோரிக்கை நிறைவேறுமாக இருந்தால்தான் நாம் சமாதானப் பேச்சுவார்த்தை மேசையில் சில விட்டுக்கொடுப்புக்களுடன் செயற்பட்டு ஓர் தீர்வுக்கு வரமுடியும்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனை நாம் சந்தித்த போது கூட அவர் எம்மிடம் மிகவும் சுமுகமாக உரையாடி விட்டுக் கொடுப்புக்களுடன் செயற்படவேண்டும் என்ற வகையில் சில உத்தரவாதங்களைத் தந்துள்ளார். அதனடிப்படையில் புலிகளுடன் மீண்டும் பேச்சு நடத்தலாம் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கின்றது.

அரசிடம் நாம் நியாயமான கோரிக்கைகளைத் தான் முன்வைக்க முடியும் என்றார். (உ-8)

## ஒப்பந்த விடயங்களை அமுலாக்குவதில் அசண்டை இராணுவ மயமாக்கலில் மட்டுமே அரசு அக்கறை

## மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் கண்டனக்குரல்

(தென்மராட்சி)

புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சொல்லப்பட்ட பெரும்பாலான விடயங்களை இலங்கை அரசாங்கம் இன்னமும் அமுல் செய்யவில்லை. இராணுவ மயமாக்கல் தொடர்பான பணிகள் மாத்திரமே தொடர்கின்றன. யாழ்ப்பாணக் குடாநாட்டில் இராணுவம் புதிய அதியுயர் பாதுகாப்பு வலயங்களை நிறுவிவருகின்றது.

யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவரான எஸ்.பரமநாதன் நேற்று முன்தினம் பண்டத்தரிப்பு தியான இல்லத்தில் நடைபெற்ற அதியுயர் பாதுகாப்பு வலயமும் சமாதான நடைமுறைகளும் எனும் தலைப்பிலான செயலமர்வில் கருத்துரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

பேர்கோங் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இச்செயலமர்வில் ஒன்றியத் தலைவர் எஸ்.பரமநாதன் தொடர்ந்தும் குறிப்பிடும்போது,

நாட்டின் சட்டவரைபின்படி சட்ட ரீதியான முறையில் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற ஒன்று இருப்பதற்கு வாய்ப்பு இல்லை. இந்த அதியுயர் பாதுகாப்பு வலயத்தினால் எமது மக்கள் படும் துன்பங்கள் துயரங்கள் சொல்லில் வடிக்க முடியாதவை.

### க.கா.குழுவின் அதிருப்தி

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் பணிகள் திருப்தியற்றவையாகவேயுள்ளன. அது எந்தப் பிரச்சினைக்கும் இதுவரை தீர்வுகளைக் காணவில்லை. நாட்டில் இராணுவ மயமாக்கலும் அபிவிருத்தியும் ஒன்று சேர முடியாது பாதிக்கப்பட்ட எமது பிரதேசத்திற்கான புனர்வாழ்வு, புனரமைப்புத் திட்டங்கள் தயாரிக்கப்பட்ட போது சிவில் சமூகத்தின் கருத்துக்கள் பெறப்படவில்லை. எல்லாத் திட்டங்களுமே மேலிருந்தே தயாரிக்கப்பட்டு மக்களிடம் திணிக்கப்படுகின்றன.

இடைக்கால நிர்வாகம் வழங்கப்படவேண்டும் என சிவில் சமூகம் வற்புறுத்தி வருகின்றது. ஆயினும் அது அரசின் காதுகளில் விழவில்லை. யாழ்ப்பாண மாவட்டத்துக்கான புனர்வாழ்வு-புனரமைப்புக் கொள்கைகள் வடிவமைக்கப்படவில்லை. அமைதியையும் இயல்பு வாழ்க்கையையும் ஏற்படுத்துவ்தில் அரசு தோல்வியையே சந்தித்துள்ளது.

வரலாறு மீள எழுதப்படமுடியாது. ஆனால் வரலாற்றில் இருந்து பாடங்களைப் படித்துக்கொள்ள முடியும். இதன் அடிப்படையில் ''வாழு-வாழவிடு'' என்ற கொள்கையுடன் இராணுவம் கொல்லப்படுமாயின் பல பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண முடியும்.

### மேலாதிக்கம் எல்லை மீறுகின்றது

நாட்டின் புனர்வாழ்வு-புனரமைப்புப் பணிகளைத் திட்டமிடுவதில் அரச உத்தியோகத்தர்களின் மேலாதிக்கம் அதிகரித்துள்ளது. இதன் திட்டங்கள் யாவுமே மக்களுக்குப் பயன்படாமல் தோல்வியடைகின்றன. மக்கள் பங்களிப்புகள் இல்லாத செயல் திட்டங்கள் என்றுமே வெற்றியடைந்ததாக வரலாறு இல்லை. எனவே யுத்தத்தினால் அழிக்கப்பட்ட எமது பிரதேசத்தினைக் கட்டியெழுப்ப சிவில் சமூகத்தின் பங்களிப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்றார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பிரமுகரான சீ.வீ.கே.சிவஞானம் அங்கு கருத்துக் கூறும்போது,

நாம் இடைக்கால நிர்வாகத்தைக கோரிவருகின்றோம். இது ஒரு புதிய விடயமல்ல. இன முரண்பாடுகள் இடம்பெறுகின்ற நாடுகள் கைக்கொள்ளப்படுகின்ற முறையாகும். நாம் எக்கட்டத்திலும் பிரிந்து போகின்ற நிலைபற்றி யோசிக்கவில்லை. ஆனால் சிங்கள அரசாங்கங்கள் எமக்கு சமஷ்டி ஆட்சியைத் தராமல் இழுத்தடித்து வருகின்றன.

இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாயமான தீர்வு முன்வைக்கப்படுமானால் அதுபற்றி சிந்திக்கலாம் எனக் கூறிவருகின்றார். தலைவர் பிரபாகரன் ஏனைய தலைவர்கள் போன்றவர்கள் அல்ல. அவர் ஆம் என்று சொன்னால் ஆம்தான். இல்லை என்று சொன்னால் இல்லைதான். இதனை நாம் நன்கு புரிந்துகொள்ள வேண்டும் என்றார்.

### காற்றில் பறக்கும் வாக்குறுதிகள்

நீதிக்கும் சமாதானத்துக்குமான ஆணைக்குழுவின் தலைவரான வணபிதா ஏ.ஐ.பேர்னாட் அடிகள் அங்கு பேசுகையில்,

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் குடாநாட்டில் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. இவை பற்றி நான் அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோருடன் பேசியுள்ளேன். இவை பற்றிய தீர்க்கமான முடிவுகள் எடுக்கப்படும் என வாக்குறுதி தந்தனர். ஆயினும் இதுவரையும் எதுவும் நடைபெறவில்லை. யாருடைய பாதுகாப்புக்காக இவ் அதியுயர் பாதுகாப்பு வலயம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக எமது மக்கள் உளவியல் ரீதியான தாக்கத்தினை அடைந்துள்ளனர்.

மேலும் இதன் காரணமாக பொருளாதார ரீதியிலான பாதிப்புக்களும் ஏற்பட்டுள்ளன. அரசாங்கம் இதனை எவ் வகையில் நியாயப்படுத்தப் போகிறது. பொதுமக்களின் பாதுகாப்பே முக்கியம் என்பதை நாம் மனதில் கொள்ள வேண்டும் என்றார்.

நிகழ்விற்கு சமுகமளித்திருந்த பலாலி படைத் தலைமையணியைச் சேர்ந்த லெப். கேணல் ஜெயசுந்தரா அங்கு குறிப்பிடுகையில்,

குடாநாட்டில் புதிய பாதுகாப்பு வலயங்கள் உருவாக்கப்படுகின்றன என்ற கருத்து ஏற்கப்படக்கூடியதல்ல. எம்மைப் பொறுத்தமட்டில் அப்படியான நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் அதியுயர் பாதுகாப்பு வலயம் உள்ளதுதான். அது இராணுவத்தின் பாதுகாப்புடன் கூடிய விடயம் எனக் குறிப்பிட்டார்.

இச்செயலமர்வில் யு.என்.எச்.சீ.ஆர் நிறுவனப் பிரதிநிதியும் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளரும் கருத்துரையாற்றினர். (உ-77)


## தரம் 11 மாணவர்களுக்கான

# கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டிப் பரிசில்கள்.

1ஆம் பரிசு ரூபா 750/=
2ஆம் பரிசு ரூபா 500/=
3ஆம் பரிசு ரூபா 250/=

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

ஈழத்து எழுத்தாளர்
அமரர் கணபதி கணேசன் ஞாபகார்த்தமாக
(செம்பருத்தி பப்ளிகேஷன்ஸ் மலேசியா)
கட்டுரையின் தலைப்பு
**கல்வித்துறையில் கணனியின் பங்கு**

போட்டியின் விதிகள்:

தரம் பதினொன்றில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப்போட்டியில் பங்குபற்றலாம்.

* கட்டுரை 200தொடக்கம் 250சொற்களுக்குள் அமைதல் வேண்டும்.
* புஸ்காப் தாளில் ஒவ்வொரு தனிப்பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்.
* கட்டுரைகள் 25.07.2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின்வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்.

**இணைக்கும் பத்திரம்**
**கட்டுரைப்போட்டி இல-6**

மாணவர் பெயர்: ..........................................
பாடசாலை முகவரி: ..........................................
..........................................
கற்கும் தரம்: ..........................................

உறுதிப்படுத்துகிறேன்

..........................................
ஆசிரியர்.


## அரசாங்கத்தின் தீர்மானங்கள் பற்றி அமைச்சரவைக்கு விளக்கமளிக்க வேண்டும்

## ஜனாதிபதி சந்திரிகா கோரிக்கை


(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இடைக்கால நிர்வாக சபை அமைப்பை ஏற்படுத்துவது குறித்து ஐக்கிய தேசிய முன்னணி எடுத்துள்ள தீர்மானங்கள் பற்றி அமைச்சரவைக்கு விளக்கிக் கூறுமாறு ஜனாதிபதி சந்திரிகா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் விடுத்துள்ள அமைச்சரவைக் கூட்டத்தில் இவ் வேண்டுகோளினை விடுத்த ஜனாதிபதி, இடைக்கால நிர்வாகசபை குறித்த பேச்சுக்கள் எந்த அளவில் உள்ளன? எனவும் கேள்வி எழுப்பினார்.

இதற்குப்பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் ஜீ.எல்.பீரிஸ், இவ்விடயம் தொடர்பாக அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் கருத்துக்களை பரிமாறி வருகின்றது.

அரசாங்கம் தமிழீழ விடுதலைப்புலிப் பிரதிநிதிகளுக்கு இது தொடர்பாக சில யோசனைகளைக் கூறினாலும் அவர்களிடம் இருந்து



திட்டவட்டமான பதில் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

இருந்த போதிலும் நோர்வே பிரதிநிதிகளின் அனுசரணையுடன் தொடர்ந்தும் சமாதான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் பதிலளித்தார். (தி)

*முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்*
*திறம்பாடு இலா அ தவர்*
*-குறள்*

# வலம்புரி

## கொடூரமான கொலைகள்

யாழ்.குடா நாட்டில் தற்போது இடம் பெற்றுவரும் கொலைச் சம்பவங்களைப் பார்க்கும்போது மனிதன் மிருமாக மாறிவருகிறான் என்று கூட கூறமுடியாத அளவில் மிருகங்கள் முன்னேற்றம் கண்டுள்ளன.

கணவன் மனைவியை வெட்டிக் கொலை செய்கிறான். தம்பி அண்ணனை அடித்துச் சாகடிக்கிறான். தந்தை மகனை வெட்டித் துண்டு போடுகிறான். மகன் தந்தையைக் கொல்லுகிறான்.

இப்படியே மனித நடத்தைக்கு ஒவ்வாத செய்திகள் இப்போது யாழ்ப்பாணத்தில் பரவலாக வெளி வந்த வண்ணமுள்ளன. இத்தகைய கொலைச் சம்பவங்கள் அனைத்தும் மது போதையால் நடந்தேறிய நாடகங்கள் என்பது நிஜமாயினும் பெற்றபிள்ளையையே வெட்டிக் கொலை செய்கின்ற வக்கிர குணம் எப்படி ஏற்பட்டதென ஆய்வு செய்ய வேண்டிய பொறுப்பு உளவியலாளர்களுடைய கடமையாகும்.

எனினும் சம காலத்தில் நடந்த யுத்தங்களும் அந்த யுத்தத்தில் நடந்த கொலைகளுமே மனித மனங்களை விகாரமடைச் செய்து விட்டன என்ற முடிபைப் பெறுவதற்கு ஆய்வுகள் அவசியமில்லை.

யுத்த விமானத் தாக்குதல்கள் செல்வீச்சுக்கள் என்பவற்றால் மனித உடலங்கள் சிதறி மனித மனங்களை விகாரமடையச் வைத்துவிட்டன. இதன் காரணமாக இரக்கம், ஈகை, பாவம் என்ற மனிதப் பணபியல்கள் மறைந்து போய் கோபம், பழிவாங்கல், ஆத்திரம் போன்ற துர்க்குணங்கள் மனிதனுக்குள் புகுந்து விட்டன. இதனால் மனைவியைக் கொல்லும் மனநிலையும், கணவனை சாகடிக்கும் குரோதமும், பெற்று வளர்த்து கட்டித்தழுவி முத்தமிட்ட பிள்ளைகளை கத்தியால் வெட்டிக்கொல்லும் பயங்கரமும் தாண்டவம் ஆடக் காரணமாயிற்று.

இத்தகைய கொடூரமான செயல்கள் தடுக்கப்படாத விடத்து, வருங்காலச் சந்ததிகளுக்கும் மனிதக் கொலை சர்வசாதாரணமான விடயமாகி விடும்.

எனவே, இது விடயத்தில் பொது அமைப்புக்கள், சமய நிறுவனங்கள், மதத்தலைவர்கள், உளவியல் சார்ந்த நிறுவனங்கள் சிறுவர் பாதுகாப்பு அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியமாகும்.

இத்தகைய அமைப்புகள் கூட்டுச் சேர்ந்து சமூக மட்டங்களில் கருத்தரங்குகளை நடத்துவதன் மூலம் விகாரமடைந்து போயுள்ள மனித மனங்களை சீர்ப்படுத்த முடியும். அதேவேளை கசிப்பு, போதைப் பொருள் பாவனை போன்றவற்றை தடுக்கவும் கலாசார சீரழிவுகள் மற்றும் குறைந்த வயது திருமணங்கள் போன்றவற்றைக் கட்டுப்படுத்தவும் நடவடிக்கை எடுக்க தவறின் சமகால சமூகக் கட்டமைப்பில் சகிக்க முடியாத செய்திகள் வெளிவருவது தவிர்க்க முடியாததாகி விடும்.

## நோயாளரின் பொறுப்பின்மையால் வருடாந்தம் 25 கோடி நட்டம்

(கொழும்பு)

அரச மருந்தகங்களில் மருந்துகளைப் பெறும் நோயாளர்கள் அவற்றை வீண்விரயம் செய்வதன் காரணமாக அரசாங்கம் வருடம் ஒன்றுக்கு 25 கோடி ரூபாய் நட்டம் ஏற்படுவதாக மருந்துகளை விநியோகிக்கும், மற்றும் மருந்துகளை களஞ்சியப்படுத்துவோர் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கம் நோயாளருக்காக ஆண்டொன்றுக்கு 800 கோடி ரூபா நிதியை ஒதுக்கிறது. இவற்றை நோயாளர் உரிய முறையில் பயன்படுத்துவார்கள் ஆயின் 25 கோடி ரூபாவை சேமிக்க முடியும்.

நோயாளர்கள் தமது நோய் குணமாகும் முன்பே மருந்துகளை வீசி விடுகின்றனர். வருடம் ஒன்றிற்கு பரசிற்றமோல் குளிசைகளால் மட்டும் 4 கோடி ரூபா நட்டம் ஏற்படுகிறது.

அரசு பல்வேறு பொருளாதாரக் கஷடங்களுக்கு மத்தியிலும் நோயாளர்களின் நன்மை கருதி மருந்துகளுக்குப் பெருந் தொகை நிதியை செலவிடுகின்றது.

எனவே நோயாளர்கள் நாட்டினதும் நாட்டுமக்களினதும் நலனைக் கருத்திற் கொண்டு மருந்துகளை வீணாக்காது உரிய வகையில் பயன்படுத்த முன்வர வேண்டும் என்று மேற்படி சங்கத்தின் தலைவர் கோரிக்கை விடுத்துள்ளார். (உ-8)

## "பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்" செயற்படுத்த அரசு தீர்மானம்

(பாசையூர்)

ஓய்வூதியத் திணைக்களத் தலைவரின் நிர்வகிப்பில் 2003.1.1 ஆம் திகதி அன்று அல்லது அதன் பின்னர் நிரந்தர அடிப்படையில் அரசாங்கச் சேவை அல்லது மாகாண அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் பணியாளர்கட்கென ''பங்களிப்பு ஓய்வூதியத் திட்டம்'' ஒன்றை அறிமுகப்படுத்தி செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபத்தினை பொதுத் திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களம், சகல அமைச்சுக்களின் செயலளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களங்களின் தலைவர்கள் ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ளது.

இந்நிதியத்தின் உறுப்புரிமைக்குத் தகுதியுள்ள பணியாளர் ஒருவர் அவரது மாதாந்த சம்பாதிப்பில் 8 வீதத்தினை இந்நிதியத்திற்கு பங்களிப்பு செய்யும் அதேவேளை அரசாங்கத்தினால் அல்லது மாகாண அரசாங்கத்தினால் சூழ்நிலைகளுக்கு ஏற்ப தீர்மானிக்கப்படும் விடயத்தில் அப்பணியாளரின் மாதாந்த சம்பாதிப்பில் 12 வீதத்திற்கு சமமான தொகை பங்களிப்புச் செய்யப்படும்.

இந்நிதியம் நோக்கங்களுக்கான சம்பாதிப்பு என்பது நிதியமைச்சினால் காலத்துக்கு காலம் ஓய்வூதியம் பெறத்தக்கபடியாக இருக்கும் வகையில் பிரகடனம் செய்யப்படும் ஏதேனும் படி உள்ளிட்ட அப்பணியாளரின் மாதாந்த ஊதியங்கள் வேதனம் எனப்பொருள்படும் என்று அச்சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ-72)

### கண்ணிவெடி அகற்றும் பயிற்சி நிறைவு

(கிளிநொச்சி)

மனித நேயக் கண்ணிவெடி அகற்றும் பிரிவின் புதிய பிரிவு நேற்று பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறியுள்ளது.

நேற்றுக் காலை இடம் பெற்ற இவ் வைபவத்தில் 62 ஆண்களும் 30 பெண்களுமாக 92 பேர் இப் புதிய அணியில் பயிற்சியை முடித்து வெளியேறியுள்ளனர்.

மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பெண்களும் இடம் பெற்று பயிற்சியை முடித்துக் கொண்டு வெளியேறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-3)

## ஆவரங்காலில் அமைக்கப்பட்ட சிவசக்தி மணி மண்டப திறப்புவிழா நாளை

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் சிவன் கோவில் வீதியில் அமைக்கப்பட்டுள்ள சிவசக்தி மணிமண்டபத்தை நாளைய தினம் சிவததமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திறந்து வைக்கவுள்ளார்.

மு.ப 11.00 மணிக்கு செஞ்சொற செல்வர் ஆறு. திருமுருகன் தலைமையல் ஆரம்பமாகவுள்ள இவ் நிகழ்வில் ஆசியுரைகளை நல்லை ஆதன முதலவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், ஆவரங்கால் சிவன்கோவில் பிரதமகுரு சிவஸ்ரீ வே.நடராஜக் குருக்கள் அருட கவி சீ.விநாசித்தம்பி ஆகியோரும் வாழ்த்துரைகளை யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசியர் சு.மோகனதாஸ் யாழ்.அரச அதிபர் சி.பத்மநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ் தென்மராட்சி பிரதேச செயலர் ஸ்ரீநிவாசன் ஆகியோரும் வழங்க உள்ளனர்.

மாலை நிகழ்வுகள் பி.ப 3.00 மணிக்கு ஆரம்பமாக உள்ளன. இதில் வாழ்த்துரைகளை ஆவரங்கால் ஸ்ரீபர்வதவர்த்தினி சமேத நடராஜ ராமலிங்கேஸ்வரா தேவஸ்தான தலைவர் அ.தில்லைநாதன்; புத்தூர் ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி அதிபர் வை.ஆறுமுகம், ஆவரங்கால் நடராஜ ராமலிங்கவித்தியாலய அதிபர் பாலசுப்பிரமணியம் ஆகியோர் வாழ்த்துரைகளையும் யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தொடக்க உரையையும் கம்பன்கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ.ஜெயராஜ் மங்கள வாழ்வு எனும் தலைப்பில் சிறப்புரையையும் ஆற்றவுள்ளனர்.

தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்று நிறைவுரையை வி.அன்ரிரஸ்ற் அறங்காவலர் வீ.சிவசுந்தரம் நிகழ்த்தவுள்ளார். (உ)

### தினசரி தியானம்

**சேவை செய்யுங்கள்**

அதிகாலை 4.30மணிக்கு முன்பே விழித்தெழ முயலுங்கள இது ஒரு பழக்கம்தான்.சில நாட்கள் முயற்சித்தால் இப் பழக்கம் அன்றாட நிகழ்ச்சியாகிவிடும்.ஆசனங்களும் செபங்களும் செய்ய அதிக நேரம் கிடைக்கும்.மனம் இருந்தால் வழியுண்டு சனி,ஞாயிறு விடுமுறை நாட்களில் வெளியே சென்று வயதானவர்களுக்கும் நோயாளிகளுக்கும் சிறிதளவு சேவையாவது செய்யுங்கள். சேவை அன்பு செலுத்தும்

சுவாமி சிவானந்தர்

## வெளிநாடு செல்வோருக்கான விமான நிலைய வரியை அதிகரிக்கத் தீர்மானம்

(கொழும்பு)

விமானத்தின் மூலமும் கப்பலின் மூலமும் வெளிநாடுகளுக்குச் செல்லும் பயணிகளிடம் இருந்து அறவிடப்படும் விமான நிலைய மற்றும் துறைமுக வரியை அதிகரிப்பதற்கு அரசு தீர்மானித்துள்ளதாக நிதி அமைச்சர் கே.என்.சொக்சி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்மொழிந்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் விமான நிலைய வரியை 10 டொலர்களில் இருந்து 15 டொலர்களாக அதிகரித்திருப்பதுடன்,இவை இம் மாதத்தில் இருந்து அமுலுக்கு வரும் எனத்தெரிவித்த அமைச்சர் சொக்சி 2 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கும் விமான நிலைய சிப்பந்திகளுக்கும் வரி அறவிடப்பட மாட்டாது என்றார். (உ-10)

## வன்னியில் உள்ள நிறுவனங்களை நோர்வே சிறப்பு தூதர் நேரில் சென்று பார்வை

(கிளிநொச்சி)

வன்னிக்கு விஜயம் செய்த நோர்வே சிறப்புத் தூதுவர் ஜோன் வெஸ்பேக் வன்னியில் உள்ள பல நிறுவனங்களையும் நேரில் சென்று பார்வையிட்டார்.

புனர்வாழ்வுக் கழக நடுவப் பணியகம் மனித நேயக் கண்ணி வெடியகற்றும் பிரிவின் நடுவப் பணியகம், சிறான் செயலகம் போரூட் நிறுவனம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகம் போன்றவற்றை பார்வையிட்டதுடன் அந்த நிறுவனங்களின் செயற்பாடுகள் குறித்தும் கேட்டு அறிந்து கொண்டார். (ந-5)

## தோட்டத் தொழிலாளர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை

(கொழும்பு)

இந்திய வம்சாவளித் தோட்டத் தொழிலாளர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

மலையகப் பிரதேசங்களில் ஒரு லட்சத்து 68 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர்.

இவர்களுக்கு இலங்கைப் பிரஜா உரிமை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் முன்னாள் ஜனாதிபதி அமரர் ஜே.ஆர்.ஜெவர்த்தனா ஈடுபட்டாலும் பல தடைகள் காரணமாக அது நிறைவேறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (தி)

## ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவை 5 தினங்கள்

(யாழப்பாணம)

ஆட்பதிவுத் திணைக்களத்தின் நடமாடும் சேவை எதிர்வரும் 14,15, 16,17,18-ம் திகதிகளில் யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் இடம் பெறவுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 14-ம் திகதி கோப்பாய,கரவெட்டி,பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலகங்களிலும்,15-ந் திகதி சாவகச்சேரி மருதங்கேணி பிரதேச செயலகங்களிலும் 16-ஆம் திகதி உடுவில்,தெல்லிப்பளை,சண்டிலிப்பாய்,சங்கானை ஆகிய பிரதேச செயலகங்களிலும்,17-ஆம் திகதி வேலணை ஊர்காவற்துறை காரைநகர் பிரதேச செயலகங்களிலும் 18-ம் திகதி நெடுந்தீவு,நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேச செயலகங்களிலும் இந் நடமாடும் சேவை மூலம் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

இதுவரை அடையாள அட்டைகள் பெறாதவர்கள் அடையாள அட்டையில் மாற்றம் செய்ய வேண்டியவர்கள் மற்றும் அதனைத் தொலைத்தவர்கள் ஆகியோரிடம் இருந்து ஏற்கனவே பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களின் அடிப்படையில் இச் சேவை மூலம் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

ஏற்கனவே அனுப்பப்பட்ட விண்ணப்பப்படிவங்களில் ஆட்பதிவுத் திணைக்களத்தால் திருப்பி அனுப்பட்டதும்,குறைபாடுகள் உள்ளதுமான விண்ணப்பப்படிவங்கள் மட்டும் பரிசீலனையில் முன்னுரிமைப் படுத்தப்படும் எனவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார். (உ-15)

### நிர்வாகக் குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் நிர்வாகக் குழு தெரிவு இன்று பி.ப 3.30 மணிக்கு மல்லாகம் மகாவித்தியாலயத்தில் இடம் பெறவுள்ளது.

தெல்லிப்பளை பிரதேசத்தின் அனைத்து கிராமிய தேசிய எழுச்சிப் பேரவை பிரதி நிதிகளையும் இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு வலிகாமம் கோட்ட அரசியல்துறை கேட்டுள்ளது. (உ)

## ஆலயத்தில் சங்கிலித் திருட்டு ஆட்டோவில் துரத்திச் சென்று பறிப்பு

(நீராவியடி)

வண்ணை வரதராஜப் பெருமாள் ஆலய கும்பாபிஷேகத்திற்கு தாயாருடன் சென்ற குழந்தையின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியினை திருடிய பெண் ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்ட சம்பவம் நேற்று இடம் பெற்றுள்ளது.

இச் சம்பவம் பற்றி மேலும் கூறப்படுவதாவது; கைக் குழந்தையுடன் வந்த பெண் ஒருவரே இத்தகைய திருட்டுச் சம்பவத்தில் ஈடுபட்டிருந்தார் என்றும் இவர் சங்கிலியை திருடிக் கொண்டு ஓட்டோ ஒன்றில் ஏறி தப்பிச் செல்ல முயன்ற போதும் பொது மக்களின் உதவியோடு சங்கிலியை பறிகொடுத்த குழந்தையின் தாயார் சம்பந்தப்பட்ட பெண்ணை வின்ஸர் தியேட்டர் அருகில் வைத்து மடக்கிப் பிடித்து சங்கிலியை மீட்டார் எனவும் கூறப்படுகிறது.(உ-25)

### ஆன்மீகச் சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

செல்லக்கதிர்காமம் ஆலய மகோற்சவ கால ஆன்மீகத் தொடர் சொற்பொழிவில் இன்று வெள்ளிக்கிழமை புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்தக கல்லூரி ஆசியர் சைவப்புலவர் மு.முரளிதரன் ''சும்மா இருசொல்லற'' எனும் தலைப்பில் உரையாற்றவுள்ளார். (உ-8)

# மகன் நண்பர்களுடன் மோதல் தந்தைக்கு கத்திக் குத்து

## உடுவிலில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

மகனுக்கும் அவனது நண்பர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலை தடுக்க முற்பட்ட தந்தை கத்திக் குத்திற்கு இலக்காகி படுகாய மடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் உடுவிலைச் சேர்ந்த மு.ஜெயச்சந்திரன் (வயது42) என்ற குடும்பஸ்தரே கத்திக்குத்திற்கு இலகாகி படுகாயமடைந்தவராவார்.

பிரஸ்தாப நபரின் மகனுக்கும் அவனது நண்பர்களுக்கும் இடையே புறா வளர்ப்பில் ஏற்பட்ட பிணக்கினால் மோதல் ஏற்பட்டது.

இம் மோதலை தடுக்க முற்பட்ட தந்தையையே, மகனின் நண்பர்கள் இரும்புக் கம்பியால் தாக்கியதுடன், அவரைக் கத்தியாலும் குத்தியுள்ளனர்.

இதேவேளை அண்மைக்காலமாக யாழ்குடாநாட்டில் குடும்ப உறவுகளுக்கு இடையே ஏற்படுகின்ற மோதல்கள் அதிகரித்து வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(இ-4-43)

# பிரான்ஸ் பாதுகாப்பு அதிகாரி கொழும்பு வருகிறார்

(கொழும்பு)

பாகிஸ்தானில் உள்ள பிரான்ஸ் தூதரக பாதுகாப்பு அதிகாரி கேணல் ஜின்பிர்றேசெச்நெக் (jeanpirre-seshnec) ஒருவார கால விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 18ம் திகதி கொழும்புக்கு வருகைதரவுள்ளார்.

கொழும்புக்கு வருகைதரும் அவர் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு, முப்படைத் தளபதிகள், புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர்கள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோருடன் பேச்சுவார்த்தைகளை நடத்த உள்ளார்.

20ம் திகதி அம்பாறைக்குச் செல்லும் அவர் கிழக்குப் பிராந்தியத்திற்குப் பொறுப்பான இராணுவத் தளபதியுடன் கலந்துரையாடுவர்.

21ம் திகதி மட்டக்களப்பிற்குச் செல்லும் அவர் மட்டக்களப்பு மாவட்ட யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர், மட்டு திருமலை ஆயர், மனிதநேய அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் படை அதிகாரிகளுடனும் பேச்சு நடத்த உள்ளார்.

எதிர்வரும் 25ம் திகதி கொழும்பிலிருந்து புறப்படுவார். (த)


## ஆவரங்கால், சிவ சக்தி மணி மண்டபம்

# திறப்பு விழா

அன்புடையீர்!

வணக்கம்

ஆவரங்கால் சிவன்கோவில் வீதியில் எம்மால் அமைக்கப்பெற்ற சிவசக்தி மணிமண்டபத் திறப்பு விழாவில் அனைவரையும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

காலம்: நாளை 12.07.2003 சனிக்கிழமை முற்பகல் 10.30 மணி

### திறப்பு விழா நிகழ்ச்சிகள்

காலை 11.00 மணிக்கு மங்கல விளக்கேற்றல்- திருமுறை பாராயணம்

தலைவர், செஞ்சொற் செல்வர் திரு ஆறு.திருமுருகன்

"மண்டபத்தைத் திறந்து வைப்பவர்"

பிரதம விருந்தினர்

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி J.P

(தலைவர், துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை)

ஆசியுரைகள்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

(முதல்வர்,நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்)

சிவஸ்ரீ வே.நடராஜக் குருக்கள்

(பிரதமகுரு - ஆவரங்கால் சிவன்கோயில்)

அருட்கவி சீ.விநாசித்தம்பி ஐயா M.A

(அளவெட்டி நாகவரதநாராயணன் தேவஸ்தானம்)

### கலை நிகழ்ச்சிகள்

வாழ்த்துரை:

பேராசிரியர் சு.மோகனதாஸ்

(உபவேந்தர்- யாழ் பல்கலைக்கழகம்)

திருமிகு சி.பத்மநாதன்

(அரச அதிபர்-யாழ்ப்பாணம்)

பேராசிரியர் அ.சண்முகதாஸ்

(தலைவர்-சைவ வித்தியா விருத்திச் சங்கம்)

திருமிகு ஸ்ரீநிவாசன்

(பிரதேச செயலாளர்-கோப்பாய்)

12.00 மணிக்கு மதியபோசன விருந்து

### மாலை நிகழ்ச்சிகள்

பி.ப.3.00மணிக்கு : ஆரம்பம்

: மங்கல விளக்கேற்றல்

: திருமுறைப் பாராயணம்

வாழ்த்துரை :

திருமிகு அ.தில்லைநாதன்

(தலைவர் ஆவரங்கால்-ஸ்ரீபர்வதவர்த்தனி சமேத நடராஜ இராமலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்)

திருமிகு வை.ஆறுமுகம்

(அதிபர்-புத்தூர் ஸ்ரீசோமாஸ்கந்த கல்லூரி)

திருமிகு பாலசுப்பிரமணியம்

(அதிபர்-நடராஜ இராமலிங்க வித்தியாலயம்)

தொடக்கவுரை : கலாநிதி. தி.கமலநாதன்

(பீடாதிபதி-யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி)

சிறப்புரை "மங்கள வாழ்வு"

கம்பவாரிதி இ.ஜெயராஜ்

(அமைப்பாளர் கம்பன்கழகம்)

லலிதகலாஞ்சலி

திருமதி கிருஷாந்தி ரவீந்திரா

(விரிவுரையாளர் [illegible] கலைக்கழகம்) அவர்களின் நெறியாள்கையில் சிறப்பு நடனம்

"நாட்டிய நாடகம்"

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் வழங்கும் சிறப்பு நிகழ்ச்சி

"இசைநாடகம்"

இணுவில் இளந்தொண்டர் சபை வழங்கும் வள்ளி திருமணம்

நிறைவுரை : திருமிகு.V.சிவசுந்தரம்

(அறங்காவலர்-V&T.ரஸ்ற்)

வெஸ்டன் ஜுவல்லர்ஸ்
230,Upper Tooting Road
London S.W.17 EW
U.K.

(7251)

திரு.திருமதி வே.சிவசுந்தரம்
V&T ரஸ்ற்
ஆவரங்கால்,புத்தூர்


# நெஞ்சோடு பேசும் இசை நிலா

(யாழ்ப்பாணம்)

அங்கவீனமடைந்த மாணவர்களின் வளர்ச்சி நிதிக்காக நடாத்தப்படும் "நெஞ்சோடு பேசும் இசை நிலா" நிகழ்வு இன்று மாலை 6மணிக்கு யாழ் தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வை பார்வையிட வரும ரசிகர்களின் நலன் கருதி நிகழ்வின் இறுதியில் சகல இடங்களிற்குமான பஸ்சேவை நடாத்தப்படவுள்ளது.

இதேவேளை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய தேர்த் திருவிழாவிற்குச் செல்லும் பக்தர்களின் நன்மை கருதி, நிகழ்வு நடைபெறும் இடத்தில் இருந்து குறிகட்டுவான் துறைவரை பஸ் சேவை நடாத்தப்படவுள்ளது. இச்சேவையில் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்களும் ஏனைய தனியார் சிற்றூர்திகளும் ஈடுபடவுள்ளன.

(இ-5)

# காணிப் பிரச்சினை தீர்வு காணும் கூட்டம

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட தமிழ்-முஸ்லிம் மக்களின் காணிப் பிரச்சினைகளிற்கு தீர்வு காணும் கூட்டம் நேற்று ஆலையடி பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் அம்பாறை மாவட்ட பிரதிநிதிகளான றோபேஎல்வேசன், பீற்றர் லேயின் ஆகியோர் தலைமை தாங்கினர்.

இக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் உட்பட பல பிராந்தியத் தலைவர்களும், முஸ்லிம் பிரதிநிதிகளின் சார்பில் எம்.ஐ.மொகதீன், ஜனாப்.இப்ராகிம் ஆகியோரும் காணித் திணைக்கள உயர் அதிகாரிகளும் கலந்துகொணடனர். (இ-10)

## இடைக்கால...

மீண்டும் தொடரக் கூடிய வகையில் அவர்களை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவரக் கூடியதாக இடைக் கால நிர்வாக சபை தொடர்பான வரைபு தயாரிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் தொடரவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வதற்குரிய வாய்ப்பு அளிக்கப்படும்.

தென்னிலங்கையில் அண்மையில் இடம் பெற்ற வெள்ளப் பெருக்கின்போது அனைவரும் இணைந்து செயற்பட்டது போல இனப்பிரச்சினைத் தீர்வுக்கான முயற்சிக்கும் அனைத்து மக்களும் இணைந்து ஆதரவு தர முன் வரவேண்டும்.அனைத்து மக்களின் ஆதரவும் அரசுக்குக் கிடைக்கும் என பிரதமர் நம்பிக்கையுடன் இருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் பீரிஸ்,கடந்த ஆறு மாதங்களில் பொருளாதாரத்தில் நாடு வளர்ச்சி அடைந்திருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ம)

# மின்னல் தாக்கி பெண் மரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு பாறகாமம் பகுதியில் இடிமின்னல் தாக்கியதில் தனது குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்த தாயொருவர் உடல் கருகி அந்த இடத்திலேயே மரணமானார். அவரது குழந்தை ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 8மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த சறோசாதேவி (வயது32) என்பவரே உயிரிழந்தவராவார். (த-14)

# வித்தியானந்தன் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று பிற்பகல்3 மணிக்கு நடைபெறும் பேராசிரியர் சுப்பிரமணியம் வித்தியானந்தனின் ஞாபகார்த்த நிகழ்வில் தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி இ.சுந்தரமூர்த்தி தமிழியல் ஆய்வு என்னும் கருப் பொருளில் கருத்துரை வழங்கவுள்ளார். (த)

## லெபனானில் தங்கியுள்ள

# பணிப் பெண்கள் 77 பேர் திருப்பி அழைக்கப்படுவர்

(கொழும்பு)


லெபனானில் பணிப் பெண்களாக கடமையாற்றிய 77 இலங்கையர்கள் இன்னும் ஓர் இரு தினங்களில் திருப்பி அழைக்கப்படவுள்ளனர்.

தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்கா விடுத்த வேண்டுகோளினை அடுத்தே இவர்கள் திருப்பி அனுப்பப்படவுள்ளனர்.

லெபனான், சவுதி அரேபிய போன்ற மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்களாகச் சென்ற இலங்கைப் பெண்களுக்கு அங்கு இழைக்கப்பட்ட அநீதிகளைத் தொடர்ந்து இவர்கள் அந் நாடுகளில் உள்ள தூதரக முகாம்களில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (தி)







செஞ்சொற்செல்வர் ஆறு திருமுகனுக்கு நேற்று யாழ் தேசியக்கல்வியியற் கல்லூரி "சிவநெறித்தவமகன்" எனும் பட்டத்தை வழங்கி கௌரவித்த போது எடுக்கப்பட்ட படங்கள்.

(படங்கள்-வளவன்)


## இரண்டாம் தவணைப் பயிற்சிப்பரீட்சை

தரம் 1 முதல் 11 வரை

பரீட்சை ① 16/07/03 முதல் 21/07/03 வரை

(தனியார் கல்வி நிறுவனங்களுக்கு மட்டும்)

பரீட்சை ② 28/07/03 முதல் 01/08/03 வரை

விபரங்களைப் பெற்றுக்கொள்ள

சுந்தர் வெளியீடு, 844, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

(கோயில் வீதிச்சந்திக்கருகாமை)


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.07.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.